# சுதந்திரன்

SUTANTIRAN

தொலைபேசி 23411, விலை: சதம் 60

வள்ளுவர் ஆண்டு 2005, தை 20, மூஹறு: 20 (2-2-75) ஞாயிறு புத்தகம் 28, இதழ் 24


காங்கேசன்துறை இடைத் தேர்தலில் தமது கட்சி சார்பில் போட்டியிடும் திரு. வி. பொன்னம்பலத்துக்கு ஆதரவாக பிரசாரம் செய்வதற்காக சென்றுள்ள சிங்கள ஐக்கிய முன்னணி அரசின் அமைச்சர்கள், தங்கள் மேடைகளில் தங்கள் வாயினாலேயே தமிழர் கூட்டணியே தமிழினத்தின் உரிமைகளுக்காக அரசுடன் வாதாடியும் போராடியும வருகிறது என்கிற உண்மையை தமிழ் மக்கள் முன்னிலையில் பகிரங்கமாக ஒப்புக்கொள்வதன் மூலம் மூதறிஞர் செல்வாவுக்கு ஆதரவு தேடிவருகின்றனர்!

# உரிமையைக் கேட்பது தமிழர் கூட்டணி! உண்மையைக் கக்கினர் சிங்கள மந்திரி! எட்டப்பர் கூட்டமே! எச்சிலை நக்கு நீ! எட்டி உதைத்திடும் எங்கள் தமிழ் அணி!

ஐக்கிய முன்னணி மேடைகளில் தேர்தல் பிரசாரம் செய்துவரும் எந்த ஒரு சிங்கள அமைச்சரும் தமிழர் உரிமைகளை அரசியல் சட்டத்தில் இடம்பெறச் செய்யுமாறோ தமிழர்களின் அபிலாஷைகளை நிறைவேற்றுமாறோ அரசுடன் ஒட்டியிருக்கும் எட்டப்பர்களான திரு. வி. பொன்னம்பலம், குமாரசூரியர், தியாகராசா, அருளம்பலம், அல்பிரட் துரையப்பா போன்றோர் இதுவரை அரசிடம் கோரியதாக தங்கள் பேச்சுக்களில் குறிப்பிடவில்லை!

மாறாக தமிழர் கூட்டணியே தமிழர்களின் உரிமைகள் குறித்து அரசை நச்சரித்தும் வாதாடியும் வருகிறதென்ற உண்மையை அவர்கள் வெளிப்படையாகவே ஒப்புக்கொண்டுவருகின்றனர்!

வெளிநாட்டு உள்நாட்டு வர்த்தக அமைச்சர் இலங்கரத்தின காங்கேசன்துறை தமிழ் மக்களிடம் இதைத் தெளிவாக எடுத்துரைத்திருக்கிறார்!

அரசியல் சட்ட நகல் அரசியல் நிர்ணய சபையில் விவாதிக்கப்பட்டுக்கொண்டிருக்கும்போதே தமிழர் உரிமைகள் அதில் இடம்பெறவேண்டும் என்று தந்தை செல்வாவும் ஏனைய தமிழர் கூட்டணித் தலைவர்களும் பிரதமருக்குப் பதிலாகத் தம்மைச் சந்தித்து வலியுறுத்தியதாக திரு. இலங்கரத்தின கூறியுள்ளார். (ஆதாரம் டெயிலி மிறர் 27-1-75)

இதன் பின்னரும் [அதாவது புதிய அரசியல் சட்டம் வந்த பின்னரும்] தந்தை செல்வா, திரு. அமிர்தலிங்கம், திரு. இராசமாணிக்கம், திரு. சிவசிதம்பரம் ஆகியோரா தம்மைச் சந்தித்து தமிழ் மக்களது பிரச்சினைகளை எடுத்து விளக்கியதாகவும், அப்போது-தமிழ் மொழியின் உரிமைகள் அரசியல்சட்டத்திலேவலுவுள்ளதாக ஆணித்தரமாக புகுத்தப்படவேண்டுமென்றும், மாவட்ட சபைகள் நிறுவப்படவேண்டுமென்றும, வடக்கு, கிழக்கு மாகாணங்களில் தமிழர்கள் மட்டுமே குடியேற்றப்படவேண்டுமெனறும—மூன்று கோரிக்கைகளை அவர்கள் வலியுறுத்தியதாகவும் திரு. இலங்கரத்தின தமிழ் மக்களுக்கு பகிரங்கமாக தெரிவித்துள்ளார்! [ஆதாரம் ஈழநாடு 27-1-75]

இவ்வாறு தமிழர் கூட்டணித் தலைவர்களே தமிழுரிமை பற்றியும் தமிழர் நிலை பற்றியும அக்கறை காட்டி நடவடிக்கை எடுத்து வருவதை ஒப்புக்கொண்டுள்ள அமைச்சர் இலங்கரத்தின—வி. பொன்னம்பலமோ வேறு எந்த ஒரு எடுபிடியுமோ தமிழர் உரிமைகள் வழங்கப்படவேண்டுமென்று எந்த ஒரு கட்டத்திலும் அரசை வற்புறுத்தியதாக தமது பேச்சில் குறிப்பிடவேயில்லை! உண்மையிலே அப்படிக் கேட்டிருந்தாலல்லவா அமைச்சர் குறிப்பிடுவதற்கு!

இதன்மூலம் அமைச்சர் மற்றொன்றையும் ஒப்புக்கொண்டுவிட்டார்! அதாவது தமிழர் கூட்டணி சமாதானப் பேச்சுவார்த்தை மூலம் தமிழர் பிரச்சினைகளைத் தீர்க்க ஏற்கெனவே நடவடிக்கை மேற்கொண்டது என்ற உண்மைதான் அது!

அதுமட்டுமல்ல—

தமிழர் கூட்டணியின் சமாதான முயற்சிகள் அனைத்தும் அரசாங்கத்தின் பிடிவாதமான வெறிப்போக்கினால் தோல்வியடைந்துள்ள நிலையிலேயே தமிழர் கூட்டணி இன்று தனிநாடு கோரிக்கையை முன்வைக்கத் தொடங்கியிருக்கிறது என்கிற உண்மையையும் இலங்கரத்தினவின் பேச்சு உலகத்துக்கு பறைசாற்றுகிறது!

## இன்று சென்னையில் சனுர்த்தனம் திருமணம்!

### மூதறிஞர் செல்வா வாழ்த்து!

உலகத் தமிழ் இளைஞர் பேரவைத் தலைவர் டாக்டர் இரா. சனுர்த்தனம் எம். ஏ. அவர்கட்கும், டாக்டர் தா. லலிதகுமாரி எம். எஸ். சி. அவர்கட்கும் தமிழக முதல்வர் டாக்டர் கலைஞர் தலைமையில் சென்னை எழும்பூரிலுள்ள ரெயின்டால்ஸ் வீதி 8ம் இலக்க கட்டிடத்தில் இன்று (2-2-75) காலை 10 மணிக்கு திருமணம் நடைபெறுகிறது. அனைத்துக் கட்சிகளின் தலைவர்களும் இத் திருமண விழாவில் கலந்துகொண்டு மணமக்களை வாழ்த்துகின்றனர்.

இலங்கை வாழ் தமிழ் மக்களின் விடுதலையில் நாட்டங்கொண்டு—உள்ளத் தூய்மையுடன் தன்னுடைய நேரத்தையும் நினைப்பையும் இதற்காகவே அர்ப்பணித்துவரும் வரும்—இலங்கைத் தமிழர்களின் அடிமை நிலையை உலகின் கண்களுக்கு கொண்டுவருவதற்காக சென்ற டிசம்பர் 10ம் நாள் சென்னையில் உண்ணாவிரதம் மேற்கொண்டு அதன்காரணமாக கைது செய்யப்பட்டு ஆறு நாட்கள் காராககிருகத்தில் கழித்தவருமான திரு. சனுர்த்தனம் அவர்களின் திருமணத்தையொட்டி மூதறிஞர் தந்தை செல்வா, நாவலர் அமிர்தலிங்கம் ஆகியோருட்பட தமிழர் கூட்டணித் தலைவர்கள், வாழ்த்துச் செய்திகளை அனுப்பியுள்ளனர்!



இலங்கையிலிருந்து சனுர்த்தனத்துக்கு வாழ்த்துத்தெரிவித்து நூற்றுக்கணக்கான தந்திகள் அனுப்பப்படுவதுடன் மணமக்களின் பெயரில் கோவில்களில் விசேட பூசைகள், பிரார்த்தனைகளும் நடைபெறுகின்றன. தமிழ் இளைஞர் பேரவையினர் இந்த ஏற்பாடுகளைச் செய்துள்ளனர்!

வள்ளுவர் வகுத்த இல்லற வாழ்வில் இறங்கவிருக்கும் நண்பர் சனுர்த்தனம் அவர்கட்கும் அவரைக் கைப்பிடிக்கும் சகோதரி லலிதகுமாரி அவர்கட்கும்

—8ம் பக்கம் பார்க்க



## மூதறிஞருக்கு ஆதரவாக மாணவர்கள் படையெடுப்பு

காங்கேசன்துறைத் தேர்தல் பிரசாரத்தில் மாணவ மாணவிகள் தீவிரமாக கோதாவில் குதித்துவிட்டனர். யேம்படி மகளிர் மாணவிகள் வார இறுதி நாட்களில் காங்கேசன்துறைத் தொகுதியைச் சேர்ந்த தமது சக மாணவிகள் வீடுகளில் முகாமிட்டு மேற்படி தேர்தல பணியை நடத்திவருகிறார்கள்.

உரும்பிராய் இந்துக் கல்லூரி மாணவர்கள் வைகாசியிலிருந்து ஆரம்பித்து தொகுதி முழுவதும் வீட்டுக்கு வீடு சென்று தேர்தல் பிரச்சாரம் செய்ய முடிவு செய்திருக்கிறார்கள்.

இவ்வார இறுதியில் இருந்தே இப்பணியை ஆரம்

## தேர்தலில் வாக்களிக்க

### அரச ஊழியருக்கு விடுமுறை

காங்கேசன்துறைத் தொகுதியைச்சேர்ந்த அரசாங்க ஊழியர்கள் வாக்களிப்பதற்கு விசேட விடுதலைபெற்றுக்கொள்ளும் உரிமையுண்டு. வெளிமாவட்டங்களில் வசிக்கும் வாக்காளர்கள் தாபனக்கோவை XII 11:8 இன்படி தமது திணைக்களத் தலைவர்களிடம் விண்ணப்பித்து 4 மணித்தியாலங்களுக்குள் இரண்டு நாள் விடுதலையைப்பெற்றுக்கொள்ளலாம்!

இலங்கை வாழ் தமிழ் பேசும் மக்களின் உரிமை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழ் ஈழத்தில் இடதுசாரிகளின் வீழ்ச்சி!
# புள்ளி விபரங்கள் இதோ கூறுகின்றன சாட்சி!
# சிங்களக் கூட்டணியால் தமிழனுக்கு தாழ்ச்சி!
# தமிழர் கூட்டணியால் நமக்கு வரும் மீட்சி!

தமிழர்கள் காலத்துக்குக் காலம் தேசியத் தலைவர்கள் என்று தவறுகக் கருதப்பட்ட சிங்களத் தலைவர்களுடன் ஒத்துழைப்பதன்மூலம் தமதுஉரிமைகளைப்பெற முடியுமெனக் கனவுகண்டு வந்திருக்கின்றனர். பல ஒப்பந்தங்கள் செய்யப்பட்டுள்ளன. எனினும் அவையெல்லாம் கிழித்தெறியப்பட்டன. வாக்குறுதிகள் மீறப்பட்டன. தமிழர்களுடைய உரிமைகளை அதிகம் பறிப்பவர்கள் யார் என்ற போட்டியிலே யூ. என். பி.யும் எஸ். எல். எஃபியும் மாறிமாறி ஆட்சி பீடத்தைக் கைப்பற்றி வந்தன; வருகின்றன.

இந்தப்போட்டியில் தமிழினத்தை இந்த நாட்டிலிருந்து ஒழித்துக் கட்டச் சிங்களம் மட்டும் சட்டத்தைக் கொண்டு வந்த பண்டாரநாயக்கா கட்சியுடன் இடதுசாரிகள் உறவுகொண்டனர். இதன் மூலம் எழுச்சியுற்றிருந்த இடதுசாரி இயக்கம் 1960ம் ஆண்டுக்குப்பின் தனது வீழ்ச்சியைப் பெறத்தொடங்கி இன்று முற்றாக அழியும் நிலையை எய்திக்கொண்டிருக்கிறது.

சிங்களம் மட்டும் சட்டத்திற்கு இடதுசாரிகள் பலியாகி விட்டதனால் தமிழீழத்தில் வளர்ந்த இடதுசாரி இயக்கம் பரிதாபகரமாக வீழ்ச்சியடைந்தது. மார்க்சீய லெனினிஸத் தத்துவத்தை நன்கு உணர்ந்து கொண்டு அதனை ஆதரிப்பவர்கள் மார்க்சியத்தின் தோல்விக்காகக் கவலைப்படும் அதே நேரத்தில் சிங்கள சோசலிச வாதிகளின் மாயாவாதம் மறைவதற்காக மகிழ்ச்சியடைகின்றனர்.

சிங்கள தேசாபிமானியும் சிங்கள சோசலிஸ்டுகளும் 1956ம் ஆண்டு முதல தமிழரசுக் கட்சியினர் இந்த நாட்டின் அரசியலிலிருந்து முற்றாக ஒதுக்கப்பட்டு விட்டார்கள் என்ற பிரசாரத்தின் மூலம் மக்களை ஏமாற்ற முனைந்துள்ளனர். இந்தத் தேர்தலிலே கூட இதனையே அவர்கள் சொல்லி வருகிறார்கள். எனவே இந்த வேளையில் தமிழரின் எதிர்காலப் போக்கு எவ்வாறு அமைந்தது என்பதைப் புள்ளி விபரங்களுடன் மக்கள் முன் சமர்ப்பிக்கக் கடமைப்பட்டவர்களாகிறோம்.

### தமிழரசுக் கட்சி முன்வைத்த கொள்கைகள்

இலங்கைத் தமிழரசுக் கட்சி தமிழினத்தின் சார்பில் ஆங்கிலேயரால் இணைக்கப்பட்ட இலங்கை என்ற எமது தாய்த் திருநாட்டை ஒருமைப்படுத்தி அவ்வொருமைப்பாடு நிலை நிறுத்தப்படுவதற்கான வழியாகப் பின்வரும் கொள்கைகளை மக்கள் முன்வைத்துப் போட்டியிட்டது:-

(1) தமிழ் பேசும் இனத்துக்குக் கேடு விளைக்கும் இன்றைய ஒற்றை ஆட்சியை ஒழித்து சமஷ்டிக் கூட்டாட்சியை நிறுவி அதன் மூலம் தமிழ் பேசும் மக்கள் சுதந்திர புருஷர்களாகத் தன்மானத்தோடு உரிமைவாழ்வு வாழ வழிவகுப்பது.

(2) தமிழ் பேசும் மக்கள் தமது சொந்தப் பிரதேசத்திலேயே சிறுபான்மையினராக்கப்பட்டு அதன் மூலம் அவர்களது அரசியல் உரிமைகள் பறிக்கப்படும் அநியாயத்தைத் தவிர்க்க திட்டமிடப்பட்ட சிங்களக் குடியேற்றங்கள் தமிழ் பிரதேசங்களில் நடப்பதைத் தடுப்பது.

(3) தமிழ்மொழிக்கு ஆட்சியில் சிங்களத்தோடு ஒத்த சரிசம அந்தஸ்து பெறுவது.

(4) மலைநாட்டுத் தமிழருக்கு அவர்களின் இழந்த உரிமைகளை, அவற்றிலும் சிறப்பாக அவர்களின் பிரஜா உரிமையைப்பெற்றுக்கொடுப்பது.

### திருமலைத் தீர்மானம்

1956ஆம் ஆவணித் திங்கள் 20ஆம் நாள் திருமலையில் நிறைவேற்றப்பட்ட இத்தீர்மானங்களையே தமிழரசுக்கட்சி 1956முதல் தனது கொள்கையாகப் பிரகடனப்படுத்தித் தேர்தலில் போட்டியிட்டது. 1970மே மாதம் நடைபெற்ற தேர்தல் வரை தமிழரசுக் கட்சி இதே கொள்கைகளின் அடிப்படையில் போட்டியிட்டது.

இக்கொள்கைகளுக்கு ஆரம்ப ஆண்டுகளில் மக்கள் பூரண அங்கீகாரம் தரவில்லை; எனினும் பண்டாரநாயக்காவின் தீர்க்க தரிசனமற்ற கொள்கைகள் ஏற்படுத்திய விளைவுகள் மக்களை தமிழரசுக் கட்சியின் அணியில் திரளச்செய்தன. காலத்திற்கு காலம் வந்த சிங்கள ஏகாதிபத்திய அரசுகளின் தவறான போக்கு மக்களின் உறுதியை வலியுறச் செய்தது.

தமிழரசுக் கட்சியின் வளர்ச்சி தற்செயலானதல்ல. அது படிமுறையானது. வெறும் உணர்ச்சிக்கு அடிமைப்பட்ட காரணத்தால் திடீரென ஏற்பட்டதல்ல. மக்கள் எண்ணித் துணிந்து எடுத்த முடிவு என்பதை வரலாற்று வளர்ச்சி காட்டுகிறது. (அட்டவணை காண்க)

### தேய்பிறை

மறுபுறத்தில் இடதுசாரிகளின் வளர்ச்சி 1960ம் ஆண்டு வரை வளர்ந்து பின் படிப்படியாகத் தேய்ந்து வருவதைக் காணலாம். 1960ம் ஆண்டு நடைபெற்ற இரண்டாவது பொதுத்தேர்தல் வரை இடதுசாரிகள் தமது சொந்தக் கட்சிக்கொள்கைகளின் அடிப்படையில் போட்டியிட்டனர். [illegible] தமது [illegible] கொள்கை எனப் பிரகடனம் செய்தனர். எனவே முற்போக்கு எண்ணங்கொண்டவர்களும் மார்க்ஸிய தத்துவங்களில் ஈடுபாடுகொண்டோரும் அவர்களை ஆதரிக்க முன்நின்றனர். ஆனால் 1965ஆம் ஆண்டுப் பொதுத் தேர்தலில் அவர்கள் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியுடன் தேர்தல் உடன்பாடு கொண்டு சிங்களம் மட்டும் சட்டத்தைஏற்றுக்கொண்டதன் பயனாக முற்போக்கு எண்ணங்கொண்டிருந்த தமிழர்களும் தாம் சென்ற பாதை மார்க்ஸிய லெனினிஸ வழியல்ல; சிங்கள சோசலிச வழியே என்பதை உணரத் தலைப்பட்டனர். இதனால் இடதுசாரிகளுக்குத் தாம் வழங்கிய ஆதரவை நிறுத்திக்கொள்ள நேர்ந்தது.

ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி வகுப்புவாத, பிற்போக்குவாத, முதலாளித்துவக் கட்சி எனத் தமது தலைவர்கள் போதித்து வந்த கொள்கையைத் திடீரெனத் துறந்துவிட தமிழ் இடதுசாரி ஆதரவாளரால் முடியவில்லை. எனவே, அவர்கள் வாக்களிப்பிலிருந்து ஒதுங்கிக்கொண்டனர். ஸ்ரீலங்கா—சமசமாஜ — கம்யூனிஸ்ட் கூட்டணி இவ்வகையில் பிரதேசக் கட்சிகளையே மக்கள் முற்றாக நாட வேண்டிய நிலையை ஏற்படுத்தியது. இவ்வுண்மையைப் பின்வரும் அட்டவணை தெளிவாக்காட்டுகிறது.

1947ஆம் ஆண்டு நடைபெற்றபொதுத்தேர்தலிலே 16522 வாக்காளர்களுடைய ஆதரவுடன் அரசியற் பிரவேசம் செய்த இடதுசாரிகள் 1960—முதல் தேர்தலில் 43,338 வாக்குகளைப் பெற்று உச்ச நிலையை அடைந்து, 1970ல் மீண்டும்தொடங்கிய இடத்திற்கே (16,658 வாக்குகள்) வந்து நிற்பதைக் காண்கிறோம்.

உண்மை உள்ளங்கைநெல்லிக்கனிபோல் தெளிவாக இருந்தபோதிலும் தோல்வியை ஒப்புக்கொள்ளவிரும்பாத இடதுசாரிகள் "கொள்ளை வருது கோபுரம் போலே" என்பசப்பு மொழிகூறி மக்களை ஏமாற்ற முனைந்துள்ளனர். கொயபல்ஸ்முறையிலே பொய்யை மெய்யென்று திரும்பத் திரும்பக் கூறுவதன் மூலம் அதனை உண்மையாக்கமுயல்கின்றனர். அவர்கள் முயற்சி தொடரட்டும். தோல்வியை அதன் முழு அர்த்தத்தில் விளங்கிக்கொள்ளத் தமிழ்ப் பெருங்குடி மக்கள் அவர்களுக்கு வழிகாட்டுவார்கள்.

மறுபக்கத்தில் தமிழரசுக் கட்சியின் வளர்ச்சி ஐயந்திரிபற உண்மை நிலையை எடுத்துக் காட்டுகிறது. 1952ல் 45,331 வாக்காளரின் ஆதரவுடன் ஆரம்பமான தமிழரசுக் கட்சியின் வளர்ச்சி ஏற்ற—இறக்க நிலைக்குட் படாது உறுதியாக வளர்ந்துசென்று இரண்டு லட்சத்து முப்பத்தெட்டாயிரத்து நானூற்று முப்பத்தெட்டு (2,38,438) வாக்காளர்களுடைய ஆதரவைப்பெற்றுள்ளது.

ஆகவே, தமிழர்கள் சரியாகச் சிந்திக்கிறார்கள்; அவர்களுடைய நியாயபூர்வமான குறைகள் உதாசீனம் செய்யப்படுகிறது என்ற உண்மையை அனைவரும் ஒருமுகமாக ஒப்புக்கொள்கின்றனர்; அவர்களுடைய அபிலாஷைகள் தீர்க்கப்படாதவரை அவர்களுடைய சிந்தனை திரும்பமாட்டாது; என்பவைதனையே மேலே உள்ள புள்ளி விபரங்கள் காட்டுகின்றன.

### இடைத்தேர்தல் எப்படி வந்தது?

எதிர்வரும் 6ஆம் திகதி காங்கேசன்துறையில் நடைபெறவிருக்கும் இடைத்தேர்தலின் நோக்கம் என்ன? ஒரு பாராளுமன்ற (தேசிய பேரவை) உறுப்பினரைத் தெரிவு செய்வதற்காகவா இது நடைபெறுகிறது? இல்லை என்பதை அனைவரும் அறிவர். சென்ற பொதுத் தேர்தலில் (1970) தமிழரசுக் கட்சி, தமிழ்க்காங்கிரஸ், ஈழத் தமிழர் ஒற்றுமை முன்னணி, கம்யூனிஸ்டுக் கட்சி என்பன தமது கொள்கைகளை முன்வைத்துப் போட்டியிட்டன. மக்கள் தமிழரசுக்கட்சிக்கு அதிகப்படியான ஆதரவை நல்கினர்.

இன்று தமிழுரிமை நாடும் மேலே கூறப்பட்ட மூன்று தமிழ்க்கட்சிகளும் மலையகத் தமிழர் இயக்கமான இலங்கைத் தொழிலாளர் காங்கிரசும் ஒன்றிணைந்து தமிழர்கூட்டணியாக இயங்குகின்றன. இக் கூட்டணியின் உறுப்பினர்கள் பாராளுமன்றத்திற்கு உள்ளும் புறமும் பல்வேறு கொள்கைகளை வைத்துப் போராட்டங்களை நடாத்தினர். தேசிய ஒற்றுமையைக் கருத்திற்கொண்டு தமது இறுதி இலட்சியக் கோரிக்கைகளைத் தற்காலிகமாக விட்டுக்கொடுத்து ஆறு அம்சக்கோரிக்கையை முன்வைத்தனர். இக்கோரிக்கைகளையும் சிங்களக் கூட்டணி முற்றாக மறுதலித்துவிட்ட காரணத்தால் தமிழர் கூட்டணியின் பணிப்புரைக்கேற்ப அதன் தலைவர் திரு. செல்வநாயகம் தமது பாராளுமன்ற உறுப்பினர் பதவியைத் துறந்து இடைத் தேர்தலை உருவாக்கினர்.

தமிழரசு, தமிழ்க்காங்கிரசு, ஈழத்தமிழர் ஒற்றுமை முன்னணி என்ற மூன்றும் இத்தேர்தலில் ஒன்றிணைந்து நிற்பதால் தமிழர் கூட்டணி வேட்பாளரான திரு. செல்வாவின் வெற்றியும் சிங்களக் கூட்டணி வேட்பாளர் திரு. வ. பொன்னம்பலம் அவர்களின் தோல்வியும் வாக்கெடுப்பின்றியே தீர்மானிக்கப்பட்டவை ஆகும்.

### பிரச்சினை இதுதான்

எனவே, வாக்காளர் முன்னுள்ள பிரச்சினை தோல்வியடையப்போகும் சிங்களக் கூட்டணி வேட்பாளருக்கு எத்தனை வாக்குகள் என்பதே. இதனை மக்கள் விவேகத்துடன் தீர்மானிக்க மேலே உள்ள புள்ளி விபரம் அவர்களுக்கு வழிகாட்டும்.

சிங்களக் கூட்டணியின் சார்பில் போட்டியிடும் பொதுவுடைமைக் கட்சி சிங்கள மக்களால் முற்றாக ஒதுக்கப்பட்ட கட்சி. சிங்களக் கூட்டணியில் சேர்ந்ததால் அவர்கள் சிங்கள நாட்டில் ஒரு சில தொகுதிகளில் வெற்றியீட்ட முடிந்தது. எனவே பொதுவுடைமைக் கட்சியினர் நேரடியில் வெற்றி பெற்றுத் தனிக் கட்சியாகப் பெரும்பான்மையினரின் ஆதரவுடன் ஆட்சியில் அமரும் வாய்ப்பை எப்போதும் பெற முடியாத நிலையில் உள்ளனர்.

—7ம் பக்கம் பார்க்க

### 1947 முதல் 1970 வரை கட்சிகள் பெற்ற வாக்குகள்

| | வடமாகாணம் | | கிழக்குமாகாணம் | வடகிழக்கில் கம்யூ-சமசமாஜி | தமிழரசுக்கட்சி மொத்தவாக்கு |
|---|---|---|---|---|---|
| ஆண்டு | கம்யூனிஸ்ட் | சமசமாஜிஸ்ட் | கம்யூ சம சமாஜிஸ்ட் | மொத்த வாக்கு | |
| 1947 | 3 494 | 11,268 | 1760 | 16 522 | — |
| 1952 | 10,911 | 4562 | 1403 | 15 876 | 45,331 |
| 1956 | 32,793 | 2703 | 4242 | 39728 | 1,43,476 |
| 1960-1 | 15,811 | 25 000 | 1577 | 42,388 | 1,75,106 |
| 1960-2 | 3651 | 6,713 | — | 17,364 | 2,11,375 |
| 1965 | 4889 | 19,123 | 833 | 24,843 | 2,17,916 |
| 1970 | | | | 16,658 | 2,38,438 |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காங்கேசன் மக்களின் கையிலுள்ள வாக்குச் சீட்டு

# இனவெறி ஆட்சியின் நெஞ்சில் வைக்கும் வேட்டு!

போர்த்துக்கேயர், ஒல்லாந்தர், ஆங்கிலேயர் போன்ற அந்நிய ஏகாதிபத்திய ஆட்சியாளரின் அடக்கு முறை ஆட்சியில் ஏறத்தாழ 400 ஆண்டுகட்கு அடிமைப் பட்டுக்கிடந்த நம் தமிழினம், 1948-பெப்பிரவரி 4ஆந் திகதியிலிருந்து சிங்கள ஏகாதிபத்திய ஆட்சியின் அடக்குமுறைக்குள் சிக்கி, விடுதலைபெற மாபெரும் போராட்டங்கள் நடத்தி வந்துள்ளது. நடத்தி வருகிறது. ஐரிஷ் மக்கள் 300 ஆண்டுக்காலம் சளைக்காது, இடைவிடாது ஆங்கில ஏகாதிபத்தியத்திற்கு எதிராகப் போராடி இன்று சுதந்திரமடைந்துள்ளார்கள். ஆனால், ஈழத் தமிழினம் பல்வேறு ஏகாதிபத்தியங்களுக்கு எதிராகத் தொடர்ச்சியாக ஏறத்தாழ 400 ஆண்டுகளாகப் போராடியுள்ளது, போராடி வருகிறது. ஐரிஷ் மக்கள் தனிநாடு பெற்று தலைநிமிர்ந்து வாழ்கிறார்கள். அதே போல் ஈழத் தமிழினமும் 'தனிநாடு' பெறும் நாள் எண்ணைப்பட்டு வருகிறது. அதன் முதல்கட்டபோராட்டமே காங்கேசன்துறை தேர்தல் எனத் தமிழ் இளைஞர்கள் கருதுகிறார்கள்.

சோல்பரி அரசியல் அமைப்புத் திட்டத்தில் ஐம்பதுக்கு ஐம்பது வேண்டுமென திரு. ஜி. ஜி. பொன்னம்பலம் கேட்டார். சிங்களத் தலைவர்கள் மறுத்தார்கள். பின்னர், தமிழ் மக்கள் தமிழரசுக்கட்சியின் தலைமை

இந்நாட்டின் பெருஞ்சாலைகளும், புகையிரதச்சாலைகளும், இந்நாட்டிற்குத் தேவையான அந்நியச் செலாவணியில் 80 வீதத்திற்குப் அதிகமானதொகையும் மலையகத்தில் வாழும் தமிழ்ப்பாட்டாளிகளின் கடும் உழைப்

(3) ஸ்ரீமா-சாஸ்திரி ஒப்பந்தத்தின் கீழ் நமது மலையகத் தமிழ்ச் சகோதரர்கள் பிரஜாவுரிமை பெற்ற பின்னும் அவர்கள் தமிழர்களாக இந்நாட்டில் வாழமுடியாது. இதனைச் ஸ்ரீமா அம்மையார் நவம்பர் 10ஆம் திகதி 1964ஆம் ஆண்டுசெவ்வாய்க்கிழமை செனேட் சபையில் நிகழ்த்திய உரை ஊர்ஜிதம் செய்கிறது. அதில் அவர் கூறினார்:- 'இலங்கைப் பிரஜாவுரிமை பெற்றவர்கள், தாங்கள் வாழும் பிரதேசத்தில் எந்த மக்கள் மத்தியில் வாழ்கிறார்களோ அவர்களுடன் காலக்கிரமத்தில் கலாச்சார ரீதியாக ஒருங்கிணை(assimilated) வார்களென்பது என்னுடைய நம்பிக்கையும் விருப்பமும் ஆகும்!" இதன் தாற்பரியமென்னவென்றால் அவர்கள் சிங்களமயமாக வேண்டுமென்பதே.

மலையகத்தில் வாழும் தமிழ்ப்பாட்டாளிகள் சிங்கள மக்களிடமிருந்து எதையும் அபகரிக்கவில்லை. இருந்

கொள்கைகளையே பின்பற்றி வந்துள்ளன; வருகின்றன. சிங்கள மக்களைப் பொறுத்தவரை, இவ்விரு கட்சிகளின் கொள்கைகளில் வேறுபாடுகள் உள்ளன என்பது தான் உண்மை.

(4) 1948ஆம் ஆண்டு சிங்கள மக்கள் சுதந்திரம் பெற்றார்கள்; 1956இல் தங்களுக்கு ஒரு பொது மக்கள் யுகம் படைத்தார்கள்; 1970இல் தங்களுடைய மக்கள் அரசாங்கத்தைப் பதவியில் அமர்த்தினார்கள்; 1972இல் தங்களுக்கு ஒரு குடியரசு அரசியல் அமைப்பை ஏற்படுத்தினார்கள். இவற்றால் அவர்களுக்கு நன்மை கிடைத்திருக்கலாம். ஆனால் அந்த நன்மைகள் தமிழ் மக்களுக்குப் பகிரப்படவில்லை என்பதே எமது குற்றச்சாட்டு.

1948ஆம் ஆண்டின் சோல்பரி அரசியல் திட்டம்தான் ஆங்கிலேயரால் திணிக்கப்பட்டது. 1972ஆம் ஆண்டின் குடியரசு அரசியல் அமைப்பு

விருப்பம் அறியப்படாது செய்யப்பட்ட ஸ்ரீமா—சாஸ்திரி ஒப்பந்தமும் அந்தஒப்பந்தத்தின்கீழ் இலங்கைக் குடியுரிமை பெறுபவர்கள் அந்நியர்களாகவே நடாத்திப் படுவார்களென்பது.

(உ) 1970 நவம்பர்- தமிழ் மாணவர்களின் கல்வியுரிமையை மறுக்கும் 'தரப்படுத்தல்' என்ற தரைப்படுத்தல்.

(ஊ) 1972 மே 22 தமிழ் மக்களின் விருப்பங்களில் சிலதுளிகூட ஏற்றுக்கொள்ளப்படாத குடியரசு அரசியல் சட்டம் அதனைத் தொடர்ந்து எவ்வித விசாரணையுமின்றி 62 தமிழ் இளைஞர்களின் சிறை வைப்பும் அவர்கள் குற்றவாளிகள் என்று நீதி மன்றத்தில் கொண்டு வந்து நிரூபிக்கப் படாமலே செய்யப்பட்ட சித்திரவதைகள்.

(எ) 1974 ஜனவரி 10 உலகத் தமிழ் மாநாட்டுப் படுகொலை.

இவற்றிற்கான பதிலை தமிழ் மக்கள், 1956 பொது மக்கள் யுகக்காரர்களுக்கு காங்கேசன்துறைத் தேர்தலில் அளிப்பார்கள். 'புலுடாக்கள் வாயாது'என்பதை தமிழ் மக்களின் திடமான பதில் மூலம் அரசாங்க எடுபிடிகள் உணர வேண்டி வரும்.

(6) ஐ. தே. கட்சி, தமிழரசுக்கட்சியின் ஆதரவுடன ஆட்சியமைத்தபோது, ஜனவரி 8, 1966, தமிழ் மொழி (விசேட விதிகள்) மசோதாவை சட்டமாக்கமுயன்ற போது, இன்றைய ஆட்சியினர் தமிழர்களுக்கு எதிராக 'மாவலவை' ஊர்வலம் நடத்தினர். அவ்வூர்வலத்தில் சுடப்பட்டு இறந்த பௌத்த தர்மத்துக்கே மாறான இனவெறியரான பிக்குவுக்கு இன்றைய ஆட்சியினர் [அப்பொழுது நாள் பீற்றர் கெனமன், என்.எம். பெரேரா உட்பட] ஆட்சிக்கு வந்ததும் முதற்காரியமாக சிலை எழுப்பினர் சிங்கள மக்கள் மத்தியில் வகுப்புவாதத்தை வளர்த்துக் கொண்டு தமிழர்களது உரிமைக்கோரிக்கைக்கு வகுப்புவாதப்பட்டம் சூட்டி மடையர்களாக்கப் பார்க்கிறார்

## ஆட்சியின் அக்கிரமப் பட்டியல் இதோ பதினைந்து!

## அன்னைத் தமிழாள் அலறுகிறாள் உள்ளம் நைந்து!

யின் கீழ், தங்கள் பிரதேச, மொழி, கலாச்சார, மத உரிமைகளைப் பாதுகாக்கு முகமாக சமஷ்டி அரசியலமைப்பைக்கோரினார்கள். சிங்கள மக்கள் நிராகரித்து விட்டார்கள். இவ்வாறு தமிழினம் தனிநாடுகோரும் நிலைக்குத் தள்ளப்பட்டு விட்டது.

இதன் மூலம் சிங்கள மக்களின் விருப்பத்தைப் பொறுத்து, இந்நாட்டில் தமிழமக்கள்வாழும்நிலையை மாற்ற தனிநாட்டை சிறந்த வழி என்பதை, வருங்கால தமிழ்ச் சமுதாயமான தமிழ் இளைஞர்கள் நன்குபுரிந்து கொண்டு, அதனை நிறைவேற்ற செயல்படத் தயாராகிவிட்டார்கள்.

தலைவர்கள் வரலாம், போகலாம் ஆனால் விடுதலைக்கான போராட்டம் நடைபெற்று வெற்றியாக்கப்படும் என்பது மட்டும் உறுதி. அதற்கு ஐரிஷ் மக்களின் விடுதலைப்போராட்டமே சான்று. இன்று காங்கேசன்துறை வாக்காளப் பெருமக்களுக்கு இலங்கை வாழ் தமிழ் இளைஞர்கள் அவைகளின் சார்பில் பல அம்சங்களைக் கீழ்ப் பட்டியலிட்டுக்காட்ட வேண்டிய கடமை எனக்குண்டு. [இப்பட்டியலிற்கு தமிழ் மக்களின் உரிமைகளுக்கு எதிரான முன்னணியின் சார்பில் போட்டியிடும் வ. பொ. விடமிருந்து பதில்களும் எதிர்பார்க்கப்படுகின்றன]

(1) 1948ஆம் ஆண்டிலிருந்து தமிழ்ப் பிரதேசங்களில் திட்டமிடப் பட்ட தனிச் சிங்களக் குடியேற்றங்களின் மூலம் கணிசமான பாரம்பரிய தமிழ்ப் பிரதேசங்கள் கபளீகரம் செய்யப்பட்டு விட்டன; செய்யப்பட்டு வருகின்றன. இதனால் தமிழ் மக்கள் விவசாயம் செய்யப் போதிய நிலமின்றி அவதிப் படுகிறார்கள் என்பது வெள்ளிடைமலை. இது தொடர்ச்சியான சிங்கள அரசாங்கங்கள் தமிழர்களுக்கு செய்து வந்துள்ளது மாபெரும் அநீதி.

(2) இந்நாட்டின் மலைப்பகுதிகளில் அழகூட்டும் தேயிலைத் தோட்டங்களும்,

பால் கிடைக்கப்பெற்றதென்பது எவரும் அறிந்ததே. இருந்தும் அவர்கள் அடிமைகள் போன்றே நடாத்தப்படுகிறார்கள். அவர்கள் 'லைன்கள்' என்று சொல்லப்படும் கூண்டுகளில் வாழ்கிறார்கள். அதுவும் அவர்களுக்குச் சொந்தமானதல்ல! அவர்களுக்கு வைத்திய வசதி இல்லை; கல்வி உரிமை இல்லை; தமிழ்ப் பகுதிகளில் கூட நிலம்பெற்று விவசாயம் செய்து பிழைக்கும் உரிமையில்லை. பசிக்கொடுமையால், மலையகத் தோட்டங்களில் (அரசாங்கத்தால் சுவீகரிக்கப் பட்டதோட்டங்கள் உட்பட) வேலை வழங்கப்படாமையால் இனியில்லை என்ற நிலையில் அவர்கள் தமிழ்ப் பகுதிகட்கு வந்து, காடுகளை வெட்டி விவசாயம் செய்யப் புகுந்த போதெல்லாம் அரசாங்கத்தால் அந்நிலங்கள்

தும், அவர்கள் சிங்கள மக்களது நிலங்களையும், வேலைவாய்ப்புக்களையும் (தோட்டத்தில் கூலியடிமைகளாக வாழ வகையிருக்கிறதே தவிர, அங்கு வழங்கப்படும் வேலையை வேலைவாய்ப்பு என்று சொல்ல முடியாது) அபகரித்துள்ளார்களென்றே சிங்கள மக்கள் மத்தியில் சிங்களத் தலைவர்களால் பிரசாரம் செய்யப்பட்டுள்ளது; செய்யப்படுகிறது. இவ்வொப்பந்தத்தை, மலையகத்தில் வாழும் தமிழ்த்தோட்டத் தொழிலாளிகளின் விருப்புவெறுப்புகள் பற்றித் துளியேனும் சிந்திக்காமல் சிங்கள மக்களை மட்டுமே கொண்ட மலைநாட்டு மக்கள் முன்னணி (உடரட்ட ஜாதிகபெரமுனை)யின் முற்று முழுதான விருப்பத்திற்கு அமையவே அம்மையார் செய்துள்ளார். அதனை அன்

நம் நாட்டவர்களால் ஏற்படுத்தப்பட்டது என்கிறார்கள்; அப்படியாயின் அதில் ஏன் தமிழ மக்களின் அபிலாஷைகளும் பூர்த்தி செய்யப் படத்தக்க வகையில் ஏற்பாடு செய்யப்படவில்லை. மாறாக 1948ஆம் ஆண்டின் சோல்பரி அரசியல் அமைப்பின் 29ஆவது விதியின் கீழ் தரப்பட்ட சிறுபான்மைக் காப்பைக்கூட அகற்றி,புதிய குடியரசு அரசியல் அமைப்பு எழுதப்பட்டிருக்கிறதே! இது சிங்கள ஆட்சியின் தமிழ் மக்கள் மீதான அடக்குமுறைகளுக்கு உதவுவதற்காகத்தானே! ஆகவே, குடியரசு அரசியலமைப்பைப் பற்றி பெருமைப் படுவதற்கு தமிழ் மக்களுக்கு என்ன இருக்கிறது!

(15) 1956இல் இங்கு புது யுகம், அதாவது பொது மக்கள் யுகம் மலர்ந்தது. என்று தங்களை முற்போக்கு

## எட்டப்பர் கூட்டமே! இவற்றுக்குப் பதிலெங்கே?

## குட்டுப்பட்டான் தமிழன் - கொதித்தெழுகிறான இங்கே!

பறிக்கப்படுகின்றன. அவர்களுக்குப் கௌரவமாக உழைத்துப் பிழைக்கும் உரிமைகூட மறுக்கப் பட்டுள்ளது. அவர்கள் உழைத்துச் சீவிப்பதற்குக் கூட இந்தச் சிங்கள முற்போக்கு அரசாங்கம் மறுக்கிறது. அவர்கள் ஒன்றுமே இல்லாத நிலையில் பிச்சை எடுக்கத்தொடங்கினால், இந்த ஐ. மு. அரசாங்கம் பொலிசை ஏவி விடுகிறது.

இந்த வாழ வகையற்ற நிலையில், வாக்குரிமையற்ற அந்த நம் சகோதரர்களுக்காகவும் அவர்கள் நிலைமை உணர்ந்து எடுத்துக்காட்டுவதற்காகவும் காங்கேசன்துறைத் தமிழ் வாக்காளப் பெருமக்கள் அனைவரும், தமிழ் மக்கள் அனைவருக்குமே அட்டூழியம் இழைத்து வரும் இவ்வரசாங்கத்தின் ஏகப்பிரதிநிதியாக இத்தேர்தலில் போட்டியிடும் தோழர் வ. பொன்னம்பலம் அவர்களுக்கு எதிராக, இந்நாட்டின் தமிழ் [illegible] அனைவரின் சார்பிலும் [illegible] விடும் தந்தை செல்வாவுக்கு உங்கள் வாக்குகள் அனைத்தை யும் அளியுங்கள்.

றைய உரையில் குறிப்பிட்டுமுள்ளார்.

மேலும் ஸ்ரீமா அம்மையார், பிரஜாவுரிமைபெறும் தொழிலாளிகளுக்கு புறம்பான தேர்தல் இடாப்பு வைக்கப்படும என்று கூறி, இவ்வேற்பாட்டிற்கான நோக்கம் சுதேசமக்களின் அரசியல் நலன்களைப் பாதுகாப்பதற்கே என்.கிறார். இதன் அர்த்தம் தோட்டத் தொழிலாளிகள் பிரஜாவுரிமைபெற்ற பின்னும், அவர்கள் சிங்கள மயமாவதால் அன்றி இலங்கையர்களாகக் கருதப்படமாட்டார்கள் என்பதல்லவா!

அம்மையாரின் நவம்பர் 10, 1964 பேச்சின்போது இன்றைய ஐ. மு. அரசே பதவியிலிருந்தது என்பது கவனிக்கத்தக்கது. தமிழ்த் தோட்டத் தொழிலாளிகளைப் பொறுத்த வரையி [illegible] தொழிலாளிகளும் தமிழ் மக்களைப் பொறுத்த வரையிலும் ஐ. தே. கட்சி

வாதிகள் என்று சொல்பவர்கள் பெருமையடிக்கிறார்கள். அதனையும் தமிழர்களாகிய நாம் சிந்திக்க வேண்டும். தமிழ் மக்களைப் பொறுத்த வரையில் 1956 இங்கு பின் எங்கள் கண்முன் சொலவது:-

(அ) 1956இன் தனிச் சிங்களச் சட்டம்; 1956 ஜூன் இனக்கலவரம்.

(ஆ) 1958 மே இனக்கலவரம்.

(இ) 1961 பெப்பிரவரியில் தமிழ் மக்களால் தங்கள் உரிமைகளுக்காக அகிம்சா வழியில் நடாத்தப்பட்ட சத்தியாக்கிரகத்தை, தமிழர்களை அந்நிய நாட்டினர் போல் பாவித்து இராணுவத்தை ஏவி அட்டூழியம் விளைவித்தமை. இதனைத் தொடர்ந்து ஈழத் தமிழகம் முழுவதும் கைப்பற்றப் பட்ட பிரதேசமாகவே நடாத்தப்பட்டு வருகிறது.

(ஈ) 1964ல் தமிழ்த்தோட்டத் தொழிலாளிகளின்

கள், தமிழ் மக்களை. அதற்கு நாம் ஏமாளிகளல்ல என்பதை காங்கேசன்துறைத் தேர்தலில் தெரிவிப்போம்.

(7) ஐ. தே. கட்சி பண்டா செல்வா ஒப்பந்தத்திற்கு எதிராகப் பாதயாத்திரை நிகழ்த்தியது. (பண்டார நாயக்கா ஆட்சிக்குவந்ததே தனிச் சிங்களச் சட்டமாகிய முன்வைத்தே. பின்னர் தமிழ் மக்களின் எதிர்ப்புக் காரணமாக செல்வாவுடன் இவ்வொப்பந்தத்தைச் செய்தார்) பின்னர் மாவட்டசபை தருவதாக கூறிகூறி ஐ. தே. கட்சி ஏமாற்றியது. திருகோணமலையில் காடு அழித்து விவசாயம் செய்த தமிழ் இளைஞர்களைக் கைது செய்தது ஐ. தே. கட்சி இவ்வேறாயன ஆர். ஜி. சேனநாயக்காவுக்கு 600 ஏக்கர் காணியை இருமலையில் வழங்கியது. திருகோணமலை,

—6-ம் பக்கம் பார்க்க

நல்லூர் சிங்கை ஆரியன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எண்ணம்

## காங்கேசன்துறை மக்களின் புனிதக் கடமை!

புதிய அரசியல் சட்டம் பற்றி இந்நாட்டில் வாழும் 35 இலட்சம் தமிழ் மக்களின் கருத்தையும் பிரதிபலிக்கின்ற பொதுஜன வாக்கெடுப்பு காங்கேசன்துறைத் தொகுதியில் இன்னும் நான்கே நான்கு தினங்களில் நடைபெறவுள்ளது.

ஆம்—பெப்ரவரி ஆறும் நாள் நடைபெறவிருக்கின்ற காங்கேசன்துறை இடைத்தேர்தல் — புதிய அரசியல் சட்டம் மீது தமிழ் மக்கள் கொண்டிருக்கும் விருப்பு வெறுப்புக்களை சனநாயகரீதியில் பிரதிபலித்துக் காட்டுகின்ற ஒரு பொதுஜன வாக்கெடுப்பாகவே நாங்கள் கருதுகிறோம்!

தமிழ் பேசும் மக்களால் தெரிவு செய்யப்பட்ட பிரதிநிதிகள் — தமிழ் மக்களின் சார்பில் அரசியல் நிர்ணய சபையில் முன்வைத்த கோரிக்கைகளையும், அபிலாஷைகளையும் அறவே புறக்கணித்து நிராகரித்து ஒதுக்கித்தள்ளிவிட்டு, பெரும்பான்மை சிங்கள பௌத்த ஏகாதிபத்தியம் தன் விருப்பப்படி தயாரித்து—தமிழ் மக்கள் மீது அவசரகால சர்வாதிகாரச் சட்டத்தின் துணையுடன் பலவந்தமாக திணிக்க முயற்சிக்கின்ற அடிமைச்சாசனமான புதிய அரசியல் சட்டத்தின் முன்னால் தமிழ் மக்கள் எதிர்காலத்தில் மண்டியிட்டு தற்கொலை புரிந்துகொள்ளப் போகிறார்களா—அல்லது அதை எதிர்த்து வீரத்துடன் போராடி தியாக ஆற்றில் நீந்தி—தங்கள் சுதந்திரத்தையும் உரிமைகளையும் மீட்டுக்கொள்ளப் போகிறார்களா என்பதை அகில உலகுக்கும் அடக்குமுறை ஆட்சிக்கும் சனநாயகரீதியில் எடுத்துக்காட்டுகின்ற ஒரு நிகழ்ச்சியாகக் காங்கேசன்துறை இடைத்தேர்தல் முடிவு அமையவிருக்கிறது.

தமிழ் மக்களைப் பொறுத்தவரை—காங்கேசன்துறையிலே நடைபெறவிருக்கின்ற இடைத்தேர்தல் — கட்சி அரசியலின் அடிப்படையில் — குறுகிய அரசியல் இலாபங்களை முன்வைத்து நடக்கின்ற சாதாரண ஒரு இடைத்தேர்தல் அல்லவே அல்ல! தமிழரசுக்கட்சித் தலைவர் தந்தை செல்வாவுக்கோ ஒரு சாதாரண பாராளுமன்ற உறுப்பினர் பதவிதான் பெரிது என்றால்—1972ம் ஆண்டு அக்டோபர் 2ம் நாள் தந்தை செல்வா அவர்கள் தமது பதவியை துறந்திருக்கவேண்டியதில்லை! புதிய அரசியல் சட்டத்தை முன்வைத்து இந்த சத்திய சோதனையில் இறங்கியிருக்கவும் வேண்டியதில்லை!

பாராளுமன்ற உறுப்பினர் பதவியை தமிழினத்தின் விடுதலைப் போராட்டத்திற்கு பயன்படுகின்ற ஒரு கருவியாகவே தமிழரசுக்கட்சி பயன்படுத்தி வருகிறது என்பதற்கு முதறிஞர் செல்வா அவர்கள் இந்த இடைத்தேர்தலை உருவாக்கியதும் இந்த இடைத்தேர்தல் மூலம்—தமிழ் மக்கள் மீது சிங்கள அரசு ஏவிவிட்டுள்ள அடக்குமுறைகளையும் அநீதிகளையும் பாரபட்சங்களையும் உலகுக்கு எடுத்துக்காட்டி அது கொண்டு வந்துள்ள சிங்கள பௌத்த ஏகாதிபத்திய குடியரசு அரசியல் சட்டத்தை தமிழ் மக்கள் நிராகரித்திருக்கிறார்கள் என்பதை உலகுக்குணர்த்த முயற்சிப்பதும் தக்க சான்றாகும்!

எனவே இந்த இடைத்தேர்தலில்—காங்கேசன்துறைத் தொகுதி வாழ் தமிழ் வாக்காளர்கள் மீது மகோன்னதமான—பாரிய பொறுப்பொன்றை—சிங்கள பாசிச ஆட்சியின் அடக்குமுறைகளுக்கும் அளவில்லாக் கொடுமைகளுக்கும் உள்ளாகி கொதித்துக்குமுறிக் கொண்டிருக்கும் இலங்கை வாழ் 35 இலட்சம் தமிழ் மக்களும் இன்றைக்கு ஒப்புவித்திருக்கிறார்கள்!

1970ம் ஆண்டு மே 27ம் நாள் ஆட்சிபீடமேறிய நேரந்தொட்டு—கடந்த 4½ ஆண்டுகளாக தமிழ் மக்களுக்கு எதிராக சிங்கள ஐக்கிய முன்னணி அரசு இழைத்துவந்த அநீதிகளுக்கும் கொடுமைகளுக்கும் சரியான பதிலடி கொடுக்கின்ற அருமையான வாய்ப்பு-வேறு எந்தத் தமிழ் தொகுதிக்கும் கிடையாத அருமையான வாய்ப்பு—காங்கேசன்துறைத் தொகுதி மக்களுக்கு தந்தை செல்வாவின் மூலம் இன்றைக்குக் கிடைத்திருக்கிறது! 1947ம் ஆண்டு தொடக்கம் தந்தையின் அரசியல் விடுதலை முழக்கம் எழுப்பிவருகின்ற மானத் தமிழ் மக்களைக் கொண்ட காங்கேசன்துறைத் தொகுதி வாக்காளர்கள்—மீண்டும் உக்கிரமாக—உறைக்கக்கூடிய இறுக்கமான பாடத்தை சிங்கள ஐக்கிய முன்னணிக்கு இடைத்தேர்தலில் நிச்சயம் புகட்டுவார்கள் என்று நம்புகிறோம்!

காங்கேசன்துறைத் தொகுதி வாக்காளர்களை தங்கள் ஆண்டியில் விழுத்துவதற்கு — ஐக்கிய முன்னணியினர் ஆசைவார்த்தைகள் பலவற்றை அள்ளி வீசுகிறார்கள்! வேலைவாய்ப்புக்கள், ஜே. பி. பட்டங்கள், ஆசிரியருக்கு இடமாற்ற ரத்துக்கள், வீடு கட்டும் கடன்கள் போன்ற இவ்வாறான இனிப்புக்களைக் காட்டி மக்களை மயக்கும் முயற்சிகள் நடைபெற்றுவருவதாக அறிகிறோம் — இந்த இனிப்புக்களால் காங்கேசன்துறை வாக்காளர்களில் ஒவர் ஏமாறுவதுபோல நடித்தாலும் — வாக்களிக்கும்போது அவர்கள் உள்ளபடியே ஏமாறமாட்டார்கள்; வீட்டுக்கே வாக்களிப்பார்கள் என்று உறுதியாக நம்புகிறோம்! ஏனெனில், பொற்காப்புக்கு ஆசைப்பட்ட பிராமணனுக்கு இறுதியில் நேர்ந்தது என்ன என்பதை மிகச் சின்ன வயதிலேயே அவர்கள் படித்துவைத்திருப்பது மட்டுமல்ல அனுபவ பூர்வமாகவும் அவர்கள் உணர்ந்திருக்கிறார்கள்!

காங்கேசன்துறை தொகுதி வாக்காளர்களில் ஒருவரேனும் இந்த வாக்களிப்பில் கலந்துகொள்ளாமல் ஒதுங்கிவிடக்கூடாது. ஒவ்வொரு வாக்குச் சீட்டும் புதிய அரசியல் சட்டத்துக்கும் ஆட்சியாளர் தமிழ் மக்களுக்கு இழைத்து...

வாக்காளர்கள் தமிழ்த் தேசிய இனத்துக்கு தாம் செய்யும் கடமையாகக் கருதி—என்ன கஷ்டங்கள் இருப்பினும் பெப்ரவரி 6ம் நாள் காங்கேசன்துறைத் தொகுதிக்குச் சென்று தந்தை செல்வாவுக்கு ஆதரவாக தங்கள் வாக்கை அளிக்கவேண்டும்! இது அவர்களின் புனிதக் கடமையென்பதை நினைவூட்டுகிறோம்!

ஈழத் தமிழினத்தின் வரலாற்றில் வேறுயாருக்கும் கிடைக்க முடியாத பெருமைக்குரிய வாய்ப்பு—முதறிஞர் தந்தை செல்வாவை தந்ததால் காங்கேசன்துறைத் தொகுதிக்குக் கிடைத்தது; அதே போல—தமிழினம் கண்ணீரும் செந்நீரும் சிந்தியபடி கொடுமைகளுக்கு ஈடுகொடுத்து—விடுதலைப்பாதையில் விரைந்து முன்னேறும் இக்கால கட்டத்தில—தமிழினத்தின் சுதந்திர தாகத்தையும் விடுதலைப் பெருணர்வையும் சிங்கள ஏகாதிபத்தியத்துக்கும் அகில உலகத்துக்கும் எடுத்துக்காட்டும் அருமையான வாய்ப்பும் காங்கேசன்துறை வாக்காளர்களின் கைகளுக்கே இப்போது வந்திருக்கிறது.

காங்கேசன்துறைத்தொகுதி வாக்காளப்பெருமக்கள்—தங்கள் கையிலுள்ள ஒவ்வொரு வாக்குச்சீட்டும்இச்சமயத்தில்சிங்களஏகாதிபத்தியத்துக்கு எதிராக பயன்படக்கூடிய துப்பாக்கி வேட்டு என்பதை மறந்துவிடக்கூடாது; சனநாயகக் களத்தில் மாற்றானுடன் போராடுவதற்கு மக்கள் கையிலிருக்கும் ஒரேயொரு ஆயுதம் வாக்குச் சீட்டுக்களாகும்!

இந்த ஆயுதத்தை இந்த அருமையான சந்தர்ப்பத்தில் சரியான முறையில் பயன்படுத்தி சிங்கள ஏகாதிபத்தியத்தையும் அது கொண்டு வந்துள்ள அரசியல் சட்டத்தையும் பாடையேற்றி—[illegible] முதறிஞர் செல்வாவுக்கு வெற்றிவாகை சூடுமாறு 35 இலட்சம் தமிழ் மக்களின் சார்பில் காங்கேசன்துறை வாக்காளர்களை...

# “இலங்கை ஒரு சிங்கள தேசம்!”

# இப்படி கூறிய சிங்களக்கூட்டணி

## இன்று போடுகிறது பரத்தை வேஷம்!

# எழுச்சி கொள்வாய் தமிழினமே!

# நாம்பெறுவோம் தமிழ்த் தேசம்!

காங்கேசன்துறைத் தொகுதிப் பெருமக்களே!

இடைத்தேர்தலில் திரு. வ. பொன்னம்பலத்துக்கு ஆதரவு தேடுவதற்கு “சிங்கள” தேசத்தின் அமைச்சர்களும் பாராளுமன்ற உறுப்பினர்களும் அங்கு படைபடையாக வருகிறார்கள். அவர்களிடம் பின்வரும் கேள்விகளைக்கேளுங்கள்.

சிங்களதேச அமைச்சர்களே! இலங்கை முழுவதையும் ‘சிங்களதேசம்’ என்று கூறிய உங்களுக்கு எங்கள் தமிழ் மண்ணில் கால் வைக்கக் கூசவில்லையா? நீங்கள் யாரை ஏமாற்றப் பார்க்கின்றீர்கள்? தமிழர்கள் யாவரும் மரங்களா மண்ணுங்கட்டிகளா?

1966ஆம் ஆண்டில் பிரதிநிதிகள் சபையில் மகா தேசாதிபதிகளின் உரைக்கு உங்களுடைய மூன்று கட்சிகளும் சேர்ந்து பிரேரித்த திருத்தப் பிரேரணையை மறந்து விட்டீர்களா? 20-7-1966ஆம் திகதி ஒழுங்குப் பத்திரத்தைப் பாருங்கள்! அல்லது உங்கள் திருத்தப் பிரேரணையைக்கேளுங்கள்.

“இந்நாடு இன்று இரையாகியிருக்கும் ஆங்கில ஆதிக்கத்திலிருந்து எங்கள் சிங்கள தேசத்தை விடுவிக்கும் ஒரே வழியான ஆங்கில ஏகாதிபத்திய அதிகார வட்டத்திற்கப்பால்வெள்ளையருக்கு அடிவருடிய கறுப்பர் கூட்டம் இலங்கை மாதாவின் கண்களைக் கட்டியும், வாயைக் கட்டியும் இலங்கை மக்களுக்கு விளங்காதவகையில் அந்நிய மொழியிலமைத்த அரசியலமைப்புச் சட்டத்தின் இரும்புப்பிடியைத் தகர்த்து இந்நாட்டு மக்களால் தேசத்துக்கும் இனத்துக்குமேற்றவகையில் தாமே ஆக்கிக்கொள்ளும் தமது அரசியலமைப்புச் சட்டங்கள் பற்றி ஒருவார்த்தையாவது குறிப்பிடமறந்து போனதன் மூலம் எங்கள் தலைசிறந்த இன அபிமானத்தின் பெருமையை உலகிற்கெடுத்துக்காட்டத் தவறியமையினாலும்’!

பண்டிதர்
கா. பொ. இரத்தினம்

இந்தப் பிரேரணையில் இலங்கை முழுவதையும் ‘சிங்களதேசம்’ என்று அழுத்தந்திருத்தமாகக் கூறிய உங்களுக்குத் தமிழ்ப் பிரதேசத்திற்குவந்து ‘சமதர்மம்’பேச வெட்கமில்லையா? என்ன முகத்தோடு இங்கு வருகிறீர்கள்?

நீங்கள் பிரேரித்த பிரேரணையில் ஆங்கில ஏகாதிபத்தியம் என்பதற்குப் பதிலாகச் சிங்கள ஏகாதிபத்தியம் என்று மாற்றிவிட்டால் நீங்கள் சிங்களமொழியில் அமைத்த புதிய அரசியலமைப்பு எங்களுக்கு—தமிழ்மக்களுக்கு அடிமை விலங்காகத் தானே இருக்கிறது. இதனை மனச்சாட்சியை மதிக்கும் எவரும் தோழர் வ. பொன்னம்பலம் உட்பட மறுக்க முடியுமா?

சிங்களதேச அமைச்சர்களே! பாராளுமன்ற உறுப்பினர்களே!

சோல்பரி அரசியல் திட்டம் பற்றிய உங்கள் திருத்தப் பிரேரணையையே உங்களுடைய சிங்கள ஏகாதிபத்திய அரசியல் அமைப்புத் திட்டம் பற்றிய எங்கள் கருத்தைக் காட்ட நாங்கள் பின்வருமாறு ஒவ்வொரு சொல்லை மாற்றிக் கூறுகிறோம்.

“இந்நாடு இன்று இரையாகியிருக்கும் சிங்கள ஆதிக்கத்திலிருந்து எங்கள் (தமிழ்) தேசத்தை விடுவிக்கும் ஒரே வழியான சிங்கள ஏகாதிபத்திய அதிகார வட்டத்திற்கப்பால் சிங்களவருக்கு அடிவருடிய கறுப்பர் கூட்டம், தமிழ் மாதாவின் கண்களைக் கட்டியும் வாயைக் கட்டியும் தமிழ் மக்களுக்கு விளங்காத வகையில் அந்நிய மொழியில், அமைத்த அரசியலமைப்புச் சட்டத்தின் இரும்புப் பிடியைத் தளர்த்தி இந்நாட்டுத் தமிழ் மக்களால் தேசத்திற்கும் இனத்துக்கும் ஏற்ற வகையில் தாமே ஆக்கிகொள்ளும் தமது அரசியலமைப்புச் சட்டங்கள் பற்றி ஒருவார்த்தையாவது குறிப்பிடமறந்துபோனதன் மூலம் எங்கள் தலைசிறந்த இன அபிமானத்தின் பெருமையை உலகுக்கு எடுத்துக் காட்டத் தவறியது...

தமிழ் மக்களுக்கு உகந்த அரசியலமைப்புச் சட்டத்தைத்தான் நாம் ஆக்கப் போராடுகிறோம். சிங்களவராகிய நீங்கள் உணர்ச்சிவசப்பட்டு உங்கள் சிங்கள தேசத்தை ஆங்கில ஏகாதிபத்தியத்தின் இரும்புப் பிடியிலிருந்து விடுவிக்க முயன்றதுபோலவே தமிழ் மக்களாகிய நாம் தமிழ்த்தேசத்தைச் சிங்கள ஏகாதிபத்தியத்தின் இரும்புப் பிடியிலிருந்து விடுவிக்கப்போராடுகிறோம். எங்கள் இன அபிமானத்தை உலகறியச்செய்கிறோம்.

நாங்கள் திருத்திக் காட்டியதுக்கு உங்கள் பிரேரணையில் தடித்த எழுத்தில் இருக்கும் சொற்கள் மட்டுமே மாற்றப்பட்ட சொற்கள், நீங்கள் ஐ. தே. கட்சியினரை வெள்ளையருக்கு அடிவருடும் கறுப்பர் கூட்டம் என்கிறீர்கள். அமைச்சர் குமாரசூரியர் தோழர் வ. பொன்னம்பலம் போல சிங்கள ஏகாதிபத்தியத்தை ஆதரித்து நிற்கும் தமிழர்களைச் சிங்களவருக்கு அடிவருடும் கறுப்பர்கள் என்கிறோம்! ஆம் உங்கள் கருத்தையும் சொல்லையுமே திருப்பிச் சொல்லுகிறோம். புதிதாக ஒன்றுஞ்சொல்லவில்லை.

அமைச்சர்களே!

உங்கள் சிங்களதேசத்தை நீங்கள் ஆளுங்கள்; விரும்பினால் உங்கள் அடியை வருடும்...

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சைவ மதத்தின் உரிமைகளுக்கு அள்ளிவைத்தது ஐ. மு. ஆட்சி

அரசியல் சட்டத்தில் பௌத்தத்திற்கு முதன்மை இடமளித்து ஏனைய மதங்களை ஒதுக்கிவிட்டு, காங்கேசன்துறையில் போய் நின்று எல்லா மதங்களுக்கும் சமத்துவமளிப்பதாக நாக்கூசாது பொய் பேசி வருகிருர்கள் சிங்களக் கூட்டணியின் அமைச்சர்கள். இவர்களின் ஆட்சியில் சைவ மதத்தவர்களின் உரிமை எவ்வளவு தூரம் பறிக்கப் படுகிறது என்பதற்கு இதோ ஓர் சிறு உதாரணம்—

கொழும்பு கொம்பனித் தெரு சைவ முன்னேற்றச் சங்கத்தினர் அரும்பாடு பட்டு, பிச்சையேந்தி ரூபா 75,000 செலவில் ஒரு கட்டிடத்தை சைவ கலாசார நிலையத்திற்காக அமைத்தனர். சைவ மக்களின் பணத்தில் சைவ சமய தேவைக்காக கட்டப்பட்ட இந்தக் கட்டிடம்—பௌத்த வெறியர்களும் மதவிரோதிகளும் நிறைந்துள்ள ஐக்கிய முன்னணி அரசினுல் இரு ஆண்டுகளுக்கு முன்னர் பலவந்தமாக சுவீகரிக்கப்பட்டது.

கம்யூனிஸ்ட் தலைவர் பீட்டர் கெனமன் பிரதிநிதித்துவம் வகிக்கும் கொழும்பு மத்திய தொகுதியிலேயே சைவ மக்களின் முகத்தில் இவ்வாறு கெனமனின் அரசினுல் கரிபூசப்பட்டது!

இது அநீதியென்றும் சுவீகரித்த கட்டிடத்தை திரும்ப வழங்குமாறும், ஐக்கிய முன்னணி அரசின் எட்டு அமைச்சர்களுக்கு — குமாரசூரியர், பீட்டர் கெனமன் ஆகியோர் உட்பட மேற்படி சங்கம் கடிதத்துக்கு மேல் கடிதம் எழுதியும் நேரில் பேட்டி கண்டும் வற்புறுத்திப் பார்த்தது. முடிவு ஏமாற்றம் தான்!

இப்போது சைவமக்களின் பணத்தில்—சைவசமய கலாசாரப் பணிக்காக கட்டப்பட்ட இந்தக் கட்டிடத்தை பௌத்த பிக்கு ஒருவருக்கு கையளிக்க நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதாகத் தெரிகிறது.

இப்படி தனது தொகுதியிலேயே சைவ மக்களுக்கு அநியாயம் விளைவித்த மதத்தை அபின் என்று கூறுகின்ற பீட்டர் கெனமன்—வி. பி.] கும்பல்தான் மத நம்பிக்கை நிறைந்த காங்கேசன்துறை மக்களின் முன் மாயாஜாலம் [காட்டுகிருர்கள்! இதனுல்] தமிழினம் ஏமாறாது என்பதை பெப்ரவரி 6—நிச்சயம் நிரூபிக்கும்!

## சோசலிச முகமூடியை கிழித்தெறிகிருர் பாலாதம்பு!

"அரசு சார்பானதொழிற் சங்கங்களின் கோரிக்கைகளை முதலாளித்துவ அரசைக் காப்பாற்றும் தன்மையுள்ளவையே தவிர தொழிலாளர் நலனில் அக்கறை கொண்டவையல்ல. இன்றைய அரசு ஒரு இடதுசாரி அரசுமல்ல. முதலாளித்துவ வலதுசாரிகளின் பக்கமே அரசு சார்ந்துவருகிறது!"

—இவ்வாறு வர்த்தக ஊழியர் சங்கபொதுச் செயலாளர் திரு. பாலாதம்பு போலிச்சோசலிச வாதிகளான இன்றைய ஆட்சியாளர்களையும் அவர்களது ஏமாற்று அரசியலையும் கடுமையாக விமர்சித்திருக்கிறார்.

# தரப்படுத்தலால் தமிழன் பாதிப்பு!

# கெனமன் கமிட்டி வெறும் கண்துடைப்பு!

# குற்றவாளியே நீதி வழங்குவது கேலிகூத்து!

# பேரவையில் நவரத்தினம் கடும் தாக்கு!

**பல்கலைக் கழகத்துக்கு அனுமதி வழங்குவதில் பின்பற்றப்படும் 'தரப்படுத்தல்' கொள்கையாலும், மாவட்டத்தெரிவு முறையாலும் இந்நாட்டு இளைஞர்கள் பொதுவாகவும்—தமிழ் இளைஞர்கள் குறிப்பாகவும் ஆத்திரமும், அதிருப்தியும் விரக்தியும் அடைந்திருப்பதை பிரதமர் அறிவார்!**

பல்கலைக்கழக அனுமதியில் கையாளப்படும் இந்த முறைகள் பற்றி தமிழ் பெற்றோர்களும், தமிழ்க் கல்விமான்களும் மட்டுமன்றி — பீலிப் அபயநாயகா, முன்னுள் கல்வி அதிபதி அல்விஸ் போன்ற சிங்கள அறிஞர்களை கூட தமிழ் மாணவர்களுக்கு எதிராக திட்டமிட்டு நடத்தப்படுகின்ற ஒரு கொடுமை இதுவென்று பகிரங்கமாகக் கண்டித்திருக்கின்றனர்!

முன்னுள் துணைச் சபாநாயகர் திரு. மு. சிவசிதம்பரம் இது சம்பந்தமாக புள்ளி விபரத்துடன் கூடிய மனுவை தயாரித்திருக்கிருர், பிரதமரும் சபையின் ஏனைய உறுப்பினர்களும் தெரிந்து கொள்வதற்காக அதை சபா பீடத்தில் நான் இன்று சமர்ப்பிக்கின்றேன்!

இது பற்றி ஆராய்வதற்காக நீங்கள் நியமித்துள்ள மந்திரிசபை உபகுழு ஒரு கண் துடைப்பாகவேயிருக்கிறது. எந்த ஒரு மனிதனும் தனது வழக்கை தானே விசாரித்து தீர்ப்பு வழங்க முடியாது என்ற அடிப்படை கொள்கையை மீறுவதாகவும் இது அமைந்திருக்கிறது.

—பேரவையில் நவம் பேசியது.

## 'ட்றிபியூன்' ஏட்டுக்கு செல்லத்தம்பு சாட்டை!

'காங்கேசன்துறை இடைத்தேர்தல் நிலை குறித்து 'டிறிபியூன்' ஆங்கில வார ஏடு—விஷயம் தெரியாமல் புலம்பியிருக்கிறது; காங்கேசன்துறையிலுள்ள நிலை—அங்கு தந்தை செல்வாவுக்கு இருக்கின்ற பேராதரவு—வ. பொ. வுக்கு ஏற்பட்டுள்ள வீழ்க்காடு— இவை பற்றி கொழும்பிலிருந்து கற்பனையில் எழுதுகின்ற 'டிறிபியூன்' இதழுக்கு என்ன தெரியும்?"

இவ்வாறு வவுனியா பா. உ. திரு. சே. மா. செல்லத்தம்பு சுதந்திரன் நிருபருக்களித்த பேட்டி யொன்றில் தெரிவித்தார் அவர் மேலும் கூறியதாவது:-

"சென்ற பொதுத்தேர்தலில் வ. பொ. வுக்கு விழுந்த சிறுபான்மைத் தமிழர் வாக்குகளில் பெரும்பாலானவை இம்முறை தமிழர் கூட்டணிக்குக் கிடைக்கவிருக்கின்றன. கம்யூனிஸ்ட் கட்சியினர் வாயால் 'சமதர்மம்' பேசிக்கொண்டு நடைமுறையில் சாதியொழிப்புக்கு எதிராக செயற்பட்டதை சிறுபான்மைத் தமிழ் மக்கள் உணர்ந்து தமிழர் கூட்டணியின் கீழ் அணி திரண்டு விட்டனர்!

"மாவிட்டபுரம் பிரச்சினை காரணமாக கடந்த பொதுத்தேர்தலில் திரு. சுந்தரலிங்கம் ஒருவேளை வெற்றியடைந்து விட்டாலும் என்கிற அச்சத்தினுல் வ. பொ. வுக்கு வாக்களித்த சிறுபான்மைத் தமிழர்கள் இத்தேர்தலில் திரு. சுந்தரலிங்கத்தையும் தீண்டாமையொழிப்புக்கு ஆதரவாக மனம் மாறிய தமிழர் கூட்டணிக்கு வாக்களிக்க விருக்கின்றனர். அண்மையில் சிறுபான்மைத் தமிழர்கள் அதிகமாக வசிக்கும் 'மந்துவில்' பகுதியில் கம்யூனிஸ்ட் தலைவர் விக்கிரமசிங்கா கலந்து கொண்ட கூட்டத்துக்கு ஆக [illegible] ருந்தத்திலிருந்தே சிறுபான்மைத் தமிழர்களின் வாக்கு யாருக்கென்பது துலாம்பரமாகி விட்டது!

### மூதறிஞர் செல்வா...

—1-ம் பக்கத் தொடர்

பிக்கப் போவதாகவும், பிரமுகர்கள் தலைவர்கள் யாரையும் எதிர்பாராது சொந்தத்திலேயே தமது பங்கைத் தாம் நிறைவேற்றப் போவதாகவும் மேற்படி இயக்கத்தினர் கூறியுள்ளனர்.

திரு. வ. பொ. முன் ஆசிரியராகக் கடமையாற்றிய ஸ்கந்தவரோதயாக்கல்லூரியின் மாணவர்களும் தந்தைக்கு ஆதரவாக தேர்தல் களத்தில் பிரச்சாரத்தை முடுக்கி வைத்துள்ளனர். அவர்கள் சைக்கிள்களிலும் கால்நடையாகவும் வீடுவீடாகச் சென்று வாக்குக் கேட்டு காங்கேசன்துறைத் தொகுதியை வலம் வருகிருர்கள்.

தந்தைக்கு விழும் வாக்கு தமிழனை ஆதரிக்கும் வாக்கு என்றும், எதிராக போடப்படும் ஒவ்வொரு வாக்கும் தமிழனை மாற்றானிடம் காட்டிக் கொடுக்கும் வாக்கு என்றும் அவர்கள் பிரசாரம் செய்துவருகின்றனர். தமிழர் மத்தியில் காட்டிக் கொடுப்பவர்களை அடையாளங் காணும் [illegible] அவர்கள் இடைத்தேர்தலை மாற்றிவருகிருர்கள் [illegible] எதிர்வேட்பாளரின் கட்டுக்காசுக்கே அபத்தமுக்காம்!

## அண்ணனுக்கு அஞ்சலி!

உலகெங்கும் வாழும் ஆறுகோடித் தமிழர்களின் இதயசிம்மாசனத்தில் வீற்றிருக்கும் அண்ணன் — பேரறிஞர் அண்ணா அமரராகி 3-2-75 டன் ஆறு ஆண்டுகள் முடிவடைகின்றன. தமிழ் நெஞ்சங்களெல்லாம் இந்நாளில் அண்ணனை எண்ணி வணங்குகிறது; கைகூப்பித் தொழுகிறது.



அண்ணன் நினைவு நம் நெஞ்சை நெகிழ்ந்திடச் செய்திடும் இந்நாளில் — அண்ணா அவர்கள் பெருமதிப்பும் மரியாதையும் வைத்திருந்த மூதறிஞர் செல்வாவுக்கு காங்கேசன்துறை இடைத்தேர்தலில் மிகப்பெரும் வெற்றியை பெப்ரவரி 6ம் நாள் ஈட்டிக்கொடுத்து— அண்ணன் இதயத்தைப் பூரிக்கவைத்திடும் ஈழத்தமிழினம் என்று எதிர்பார்ப்போமாக.

—கோவை.

### இலங்கை ஒரு சிங்கள..

—4-ம் பக்கத் தொடர்

அழைத்துக்குடியிருந்துங்கள். எங்கள் தமிழ்த்தேசத்தை எங்களிடம் விட்டுவிடுங்கள் இதுதான் இன்றைய பிரச்சினை. எங்கள் தமிழ்த்தேசத்தையும் சிங்கள தேசமாக்க நாங்கள் விடமாட்டோம் இறுதி மூச்சுவரை போராடுவோம். எங்கள் மக்களின் உறுதியைக் காங்கேசன்துறைத் தேர்தல் முடிவு உங்களுக்கும் உலகத்துக்கும் காட்டும்.

## குமாரசூரியரும் ஆபீஸ்பையனும்!

"உலகத் தமிழ் மாநாடு கடவுள் வழிபாட்டுடன் தொடங்கப்படாததனுல் தான், அது இறுதியில் சோகத்தில் முடிவடைந்தது—"

—குமாரசூரியர்
(டெயிலி மிறர் 29-1-75)

— பனையிலிருந்து இழுத்து விழுத்தி மாட்டையும் ஏவி மிதிக்கவிட்டது போல்—தமிழ் மாநாட்டில் கூடியிருந்த மக்கள் மீது வெறிபிடித்த பொலிசாரை ஏவிவிட்டு பெண்களை மானபங்கப்படுத்தி—மக்களை அடித்துஉதைத்து ஒன்பதுபேரை அநியாயமாகக் கொன்றொழித்த சிங்கள ஏகாதிபத்தியத்தின் அடிமைஅமைச்சர் இப்போது தங்கள் அட்டூழியத்தை மறைக்க கடவுளை துணைக்கு அழைக்கிருர் பரிதாபமாக! இவர்களுக்கு சனநாயகத்தின் கடவுள்களான பொதுமக்கள் பெப்ரவரி 6ல் நல்ல தீர்ப்பு வழங்கவிருக்கிருர்கள் என்கிருன் நம் ஆபீஸ் பையன்.

### சுதந்திரன் சந்தா விபரம்

ஓராண்டு—ரூபா 30-00
அரையாண்டு " 15-00

அனுப்பவேண்டிய முகவரி:-

நிர்வாகி,
சுதந்திரன்
194 ஏ. பண்டாரநாயக வீதி.
கொழும்பு-12

## சுனுத்தனம் தம்பதிகளுக்கு வாழ்த்து!

தமிழ் இனத்தின் தலைவிதியை
தாரணியில் நிர்ணயித்து
தழைத்துவளர் தளிர்க்குலத்தை
தலைநிமிர்ந்து நடக்க வைத்து
தன்மான உணர்ச்சியுடன்
தனிநாடு தனைநிறுவி
உன் முயற்சி உயர்வு பெற
ஒப்பரிய துணையுடனே,
பல்லாண்டு நீ வாழ்க!
பாரறியப் புகழ் வாழ்க

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விடுதலை வீறுகொண்ட தமிழனுக்குத் திருநாள் பெப்ரவரி - 6!

# வீட்டுக்கு வாக்களித்து விரோதிகளை விரட்டும் நாள் பெப்ரவரி - 6!

# நாயல்ல தமிழன் என்பதை நாட்டோர்க்குணர்த்திடும் நாள் பெப்ரவரி-6!

# நாடு வேண்டும் நமக்கென்பதை நானிலத்துக்குரைத்திடும் நாள் பெப்ரவரி-6!

— 3-ம் பக்கத் தொடர்

கோணேஸ்வரம் ஆலயப் பகுதியை புனித பிரதேசமாகப் பிரகடனம் செய்வதை, ஒரு அற்ப, பௌத்த தர்மத்திற்கே இழுக்குத் தேடும் பிக்குவின் தர்க்கரீதியற்ற, புலம்பலைக் கேட்டு கைவிட்டது.

(8) தமிழ்ப் பிரதேசங்களான வடக்கும் கிழக்கும் பொருளாதாரத்துறையில் புறக்கணிக்கப்பட்டு நடாத்தப்படுகின்றன. அந்நிய நாட்டுதவிகள் சிங்களப் பகுதிகளிலேயே செலவழிக்கப்படுகின்றன.

## தமிழனுக்கு குழி...

—7-ம் பக்கத் தொடர்

சாரின் அட்டூழியத்திற்குப் பரிசாகப் பதவி உயர்வளித்து வஞ்சம் தீர்த்த பாதை; தாழ்த்தப்பட்ட சமுதாயத் தமிழ் இளைஞர்கள் பலரைக் கல்லூட்டிப் பௌத்த கலாநிதிகளாக்குவோம் எனத் தென்னிலங்கைக்கு அழைத்துச்சென்று தீண்டாதாரென அறிந்ததும் பட்டை நாமந் தீட்டி விரட்டிய சாதிப் பிளவுப் பாதை;

இத்தகைய "புதிய பாதையில்" செல்லத்தான் தமிழ் மக்களை அழைக்கிறார் செங்கொடித் தோழர் வ. பொ!

## என்ன விநோதம் பாரு!

சேர் பொ இராமநாதனை ஆதரித்துச் சுதந்திரக் குரல் எழுப்பிய தொகுதி; அமரர் வன்னிய சிங்கத்தைத் தந்த தொகுதி; தந்தை செல்வா மூலம் அகில உலகத்தின் கவனத்தையும் ஈழத்தின்பால் திருப்பிய தொகுதி; இத்தத் தொகுதி மக்களிடம் புதிய பாதை காட்டுகின்றாராம்.

என்ன விநோதம் பாரு
எவ்வளவு சோக்குப் பாரு
சங்கக் கடையைப் பாரு
சம்பாதிக்கும் வழியைப் பாரு
பத்துலட்சம் தெண்டம் பாரு
மிச்சம் இன்னும் இருக்குப்பாரு
வாரும் நீரும் இதிலே சேரும்
சோஷலிசம் இதுக்குப் பேரு;

சாதாரண காலத்திற்கூடச் செவிசாய்க்காத மக்கள் உக்கிரமான காலகட்டத்திலா இந்த முற்போக்குச் சோஷலிசத்தை ஏற்பார்கள்? தென்னிலங்கையிலேயே புதைகுழி தோண்டப்பட்டு விட்டதே!

காங்கேயன் தொகுதி மக்கள் இலங்கையில் எங்கு வாழினும், எவ்வித துன்பியற் சூழலில் இருப்பினும், வாக்களிப்பது வாழ்வின் பயன் எனக் கருதிக் கடமையைச் செய்தல் வேண்டும். பொருளாதார நிலை, பிற நெருக்கடிகளால் வர இயலாதோரை எப்படியும் வாக்களிக்க வைப்பது சூழ இருக்கும் நண்பர்களது பெருங் கடமையாகும்!

(9) தமிழ் விவசாயிகளுக்கு உபஉணவு இறக்குமதியை நிறுத்தியதன் மூலம், அவர்களது உற்பத்திப் பொருள்களுக்கு அதிக விலை கிடைக்கும்படி செய்து நன்மை செய்துள்ளதாக பறைசாற்றுகிறீர்கள். நீங்கள் குறிப்பிடும் உபஉணவு உற்பத்தியில் காலங்காலமாக வடபகுதி விவசாயிகள் ஈடுபட்டு வந்திருக்கிறார்கள். நீங்கள் கொடுத்த ஊக்கம் காரணமாக ஈடுபடவில்லை. உங்களிடம் இறக்குமதிசெய்யப் போதிய அந்நியச்செலாவணி இல்லாமையால் உப உணவு (மிளகாய், வெங்காயம்) இறக்குமதியை நிறுத்த வேண்டிய நிர்ப்பந்தத்திற்கு ஆளானீர்களே தவிர, வடபகுதி விவசாயிக்கு நன்மை செய்யவேண்டுமென்றநோக்கத்தினாலல்ல. ஏனெனில் நீங்கள் இரண்டு கொத்து அரிசி தருவோம்; விலைவாசியைக் குறைப்போம் என்று சொல்லி ஆட்சிக்கு வந்தவர்கள்.

உங்கள் முகமூடியை மேலும் கிழித்துக்காட்ட வேண்டிய கடமை எனக்குண்டு. உபஉணவு இறக்குமதி நிறுத்தப்பட்டபோது வெங்காயத்திற்குப் பெரும் கிராக்கி ஏற்பட்டது. அதன் விலையும் பெருமளவு ஏறியது. அப்போது நீங்கள் யாழ்ப்பாணத்திலிருந்து தென்பகுதிக்கு வெங்காயம் ஏற்றுமதி செய்யப்படுவதற்கு தடை விதித்தீர்கள். இதனால், ஏராளமான வெங்காயம் யாழ் குடாநாட்டில் முடங்கி, விற்பனைத் திணைக்களம் மலிவான விலையில் அதைப்பெற்று தெற்கே விற்றது என்பதை வடபகுதி விவசாயிகள் அனுபவபூர்வமாக அறிவர்.

பின் தென்பகுதியில் விவசாயிகள் புதிய ஊக்கத்தின் காரணமாக வெங்காய உற்பத்தியில் இறங்கிய பின்னர் வடபகுதியிலிருந்து வெங்காயம்கொண்டு செல்வதற்கிருந்த தடையை நீக்கினீர்கள். அண்மையில் சில மாதங்களுக்குமுன்னர் வெங்காய உற்பத்தி யாழ் குடாநாட்டில் பெருகி அதன் விலை பெரிதும் வீழ்ச்சியுற்றபோது விவசாயிகளுக்கு என்ன பாதுகாப்பளித்தது உங்கள் விற்பனைத் திணைக்களம்? ஆகவே, உங்கள் புளுடாக்களுக்கும் தமிழ் விவசாயி காங்கேசன்துறைத் தேர்தலில் பதிலளிப்பான்—வேண்டிக்கட்டிக்கொள்ளத் தயாராகுங்கள்.

(10) 'தரப்படுத்தல்' என்ற போர்வையில் படுகேவலமாக இனரீதியில் பல்கலைக் கழகப்படிப்பை உருவாக்கினீர்கள். இதனால் எண்ணற்ற தமிழ் மாணவர்கள் உயர்கல்வி வாய்ப்பைத் திறமை இருந்தும் இழந்துள்ளார்கள்; இழந்து வருகிறார்கள். இதற்கான வித்து உங்கள் பொதுமக்கள் யுகமான 1956இல் இடப்பட்டது என்பது மறுக்கப்படமுடியாதது. அப்போதைய பண்டாரநாயக்கா ஆட்சியால், 'தேசிய மொழிகள் மூலம் உயர்தரக்கல்வி புகட்டுவது பற்றி ஆராய நியமிக்கப்பட்ட குழுவின் அறிக்கை [இந்நாட்டில் உயர்தரக் கல்வி வசதிகளை எவ்வாறு கட்டுப்படுத்தவேண்டுமென்பதும் அவற்றை எவர் எவருக்கு அளித்தல்வேண்டுமென்பதும் பற்றியது] மாணவரின் திறமையை நோக்காது, சனத்தொகையை நோக்கியே உயர்தரக்கல்வி அளிக்கப்படல் வேண்டுமென்று சிபாரிசுசெய்தது. அதாவது இன அடிப்படையில் 6 சிங்கள மாணவனுக்கு ஒரு தமிழ் மாணவன் என்ற ரீதியில் அமையவேண்டுமென ஆலோசனை கூறியது. [இதற்கு ஆதாரம்; 'இலங்கை வாழ் தமிழ்பேசும் மக்களுக்கு ஒரு பல்கலைக்கழகம்' என்ற ஆ. வி. மயில்வாகனத்தின் துண்டுப்பிரசுரம்]

(11) எந்த அநியாயத்தையும் தமிழர்கள் கண்டித்தால், அதற்குப் பிற்போக்குப்பட்டம் சூட்டப்படுகிறது. இதே நேரத்தில பெரும்பான்மை இனத்தின் பிற்போக்குக் கொள்கைகளெல்லாம் முற்போக்கு என்று பாராட்டப்படுகின்றன. தமிழ் மாணவர்கள் இனரீதியிலான 'தரப்படுத்தலைக் கண்டித்து யாழ் குடாநாட்டில் பல்லாயிரக் கணக்கில் அணிதிரண்டு ஊர்வலம் நடாத்த முயன்றபோது, தோழர் வ. பொ. வின் செயற்கைச் சிவப்பு சாயமேற்றப்பட்ட செஞ்சட்டைக் காடையர், ஒரு தமிழ் மாணவனின் மண்டையைப் பிளந்து அம்மாணவனின் சட்டையை அவன் குருதியிலேயே செந்நிற மாக்கினார். இதனை அன்று ஊர்வலத்தில் கலந்துகொண்ட பல்லாயிரக்கணக்கான மாணவர்கள் அறிவர். அன்றைய இக்கொடூரச்செயலுக்கான பதில் வருகிற பெப்ரவரி 6ஆந் திகதி கிடைக்குமென்பதை வ. பொ.விற்கு அறியத் தருகிறோம். மேலும் அவ்வூர்வலம் நடைபெறுவதைத் தடுக்க பல இடைஞ்சல்களை தோழர் வ. பொ. தனது அதிகாரங்களை (அரசாங்கக்கட்சியாளன் என்ற ரீதியில்) பயன்படுத்தியதாக மாணவர்கள் இன்றும் சந்தேகிக்கிறார்கள். இருந்தும் வெற்றிகரமாக அன்று தமிழ் மாணவர் ஒரு கொடிக்கீழ் திரண்டு ஊர்வலத்தை நடாத்தி முடித்தனர்.

(12) எந்த வர்க்கப் போராட்டத்திலும் கூட தமிழர்கள் இன்று தலைமை தாங்க இயலாது. உதாரணம், வங்கி ஊழியர் வேலைநிறுத்தத்தின்போது, அச்சங்கச் செயலாளர் சிவசுப்பிரமணியம் 'தமிழர் கூட்டணிக்காரன்' என்று பட்டை நாமம் சாத்தப்பட்டார். (அவர் தமிழர் கூட்டணிக்காரராக இல்லாதிருந்த போதிலும்). மேலும் இலங்கையின் முற்போக்குகள் 'வர்க்கவாதம் தூக்கு, வகுப்புவாதம் பேசு' என்ற ரீதியிலேயே நடைபெற்றுவருகின்றன— சிங்கள மக்கள் மத்தியில். உதாரணமாக 1966 ஜனவரி 8 இல் சிங்களத்தொழிலாளர்களை தமிழ்மொழி (விசேட விதிகள்) மசோதாவிற்கு எதிராக வேலை நிறுத்தத்தில் குதிக்கும்படி தூண்டி [illegible]

(13) யாழ் மாவட்டத்துக்குள்ளேயே கிளிநொச்சியிலிருந்து யாழ் குடாநாட்டிற்கு அரிசியோ நெல்லோ கொண்டு செல்லத்தடை. இதனால் யாழ்குடாநாட்டில் அரிசி விலை மிக்க அதிகம். இதுபற்றி உடுவில் பிரதிநிதி சபையில் பிரஸ்தாபித்த போது 'தமிழர் தோழர் புகழ்' எம். எம். பெரேரா யாழ்ப்பாண மக்களிடம் தலையிருக்கு; அதை அடகு வைத்து வாங்கட்டும் என்றார். இலங்கைக்கு காலராவைக் கொண்டு வந்தவர்களும் தமிழர்கள் தாம் என்று உளறியிருக்கிறார். இக்கட்டத்தில் உபஉணவு உற்பத்திசெய்யும் வடபகுதி விவசாயிகளுக்கு நன்மை செய்திருக்கிறோம் என்ற இவர்களது பிதற்றலைப் பற்றி சிந்திக்கின்றோம் விசித்திரமாக இருக்கிறது!

(14) ஆங்கிலத்திற்கு அளிக்கப்பட்டுள்ள இடம் கூட தமிழுக்கு இல்லை. இதனை வேலைக்குமனுச்செய்த தமிழ் இளைஞர்கள் அறிவார்கள். அவர்கள் அது குறித்துப் பெறும் கடிதங்கள் தனிச் சிங்களத்தில் அல்லது சிங்களத்தில் மூலப்பிரதியும் அத்துடன் ஆங்கில மொழிபெயர்ப்புப் பிரதியும் கிடைக்கப்பெறும். சிலவேலைகளுக்கான நேர்முகப் பரீட்சை சிங்களவர்களுக்கு சிங்களத்திலும் தமிழர்களுக்கு ஆங்கிலத்திலும் நடக்கும். அரசாங்க வர்த்தமானிகளில் கூட சிலவேலைகளுக்கு சிங்களத்திலும் ஆங்கிலத்திலும் மட்டுமே விளம்பரங்கள் இருந்துள்ளன. அதற்கு தமிழர்களும் விண்ணப்பிக்கக்கூடிய நிலை இருந்தும் இது நடைபெறுகிறது.

பல்கலைக்கழக அனுமதிக்கான விண்ணப்பபடிவங்கள் கிடைக்கப்பெற்ற தமிழ் மாணவர்கள் அவை சிங்களத்திலும் ஆங்கிலத்திலும் மட்டுமே இருப்பதை அறிவார்கள். இப்படி எத்தனையோ பாரபட்சங்கள் நடைமுறையில் காட்டப்படுகின்றன.

(15) இன்று தமிழில் வழக்காடும் சலுகை இருப்பதைப் பெரிதாக அரசாங்க 'வால் பிடிகள்' கூறுகின்றனர். அதற்கு எவ்விதமான அரசியல் சட்டப் பாதுகாப்போ, வேறு சட்ட பாதுகாப்போ கிடையாது என்பதையும் இச்சலுகை எந்நேரத்திலும் மந்திரியால் 'மறுக்கப்படக் கூடியது என்பதையும் தமிழர்கள் அறிவார்கள். அரசியல் சட்டத்தில் வடக்கு கிழக்குமாகாணங்களிலுள்ள நீதிமன்றங்களைப் பொறுத்தவரை தேசிய அரசுப் பேரவை வேறு ஏற்பாடு செய்யலாம் என்று எழுதிவைத்துள்ள நீங்கள் உண்மையிலேயே தமிழுக்கு உரிமை கொடுப்பவர்களாக இருந்தால் "வேறு ஏற்பாடு" என்பதற்கு பதிலாக வடக்கு கிழக்கு நீதி மன்றங்களின் நிர்வாகம் தமிழில் நடக்கும் என்று கெட்டத்தெளிவாக ஏன் குறிப்பிடவில்லை? உங்களது இந்த 'அவிட்டாக்களை' நம்பி தமிழ் மக்கள் தங்கள் உரிமைகளுக்கான போராட்டப் பாதையிலிருந்து திசை திரும்ப மாட்டார்கள் என்பதை காங்கேசன்துறை இடைத்தேர்தல் முடிவு நிச்சயம் காட்டுவதாக அமையும்!

"அல்டஸ் ஹக்ஸ்லியைப் பற்றி அவர் இரு உலகங்களிடையே வாழ்ந்தவர் என்று கூறப்படுகிறது. ஒன்று இறந்துபட்ட உலகம்; மற்றது பிறக்க முடியாதிருக்கும் உலகம்" இந்த வாக்கியத்தை தமிழ் இளைஞர்களது இன்றைய நிலையில், அவர்கள் வாழும் இக்காலகட்டத்திற்கேற்ப நான் பின்வருமாறு திருத்திக்கூற முடியும்; நாம் இன்று இரு உலகங்களிடையே வாழ்கிறோம். ஒன்று இறந்துபட்ட அடிமைத்தனம் நிரம்பிய உலகம். மற்றது பிறப்பதற்காகப் போராடிக் கொண்டிருக்கும் சுதந்திர உலகம்.

என்று ஓரினம் அடக்குமுறைகளுக்கு எதிராகப் போராட எழுச்சி கொண்டு விட்டதோ அன்றே அதன் அடிமைத்தனமும் ஒழிந்துவிடுகிறது. இன்று தமிழினம் எழுச்சி பெற்று விட்டது; அது நிச்சயம் விடுதலை பெற்றே தீரும்.

இவற்றிற் கிடையேயான எல்லைக்கோட்டின் ஆரம்பம் பெப்ரவரி 6 ஆந் திகதியாகும். அது தொடர்ந்து தீர்மானிக்கப்படும் நாள் வெகுதூரத்திலில்லை. காங்கேசன்துறைத் தேர்தலோடு தமிழ் இளைஞனும் சர்வதேச அரங்கில் பிரகாசிக்க ஆரம்பிப்பான்!

"சிக்கனமே சிறந்த செல்வம்"

சிக்கன செலவிற்கு மில்க் வைற் பார் சோப் வாங்கி உபயோகியுங்கள்.

2 மேலுறைகளை அனுப்பி அழகிய காந்தி நிதிக் கலண்டரையும் நேர சூசியையும் பெற்றுக் கொள்ளுங்கள்.

மில்க்வைற் சவர்க்காரத் தொழிலகம்
த. பெ. எண் 77, யாழ்ப்பாணம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழனுக்கு குழிதோண்டும் "முற்போக்கு" பாதை!
# அதை நம்பும் தமிழன் வெறும் பேதை!
# கண்ணீரில் வளர்ந்தது நம் விடுதலைக் காதை!
# காங்கேயனிலோ பெறுவோம் வெற்றி வாகை!

**வித்துவான் வ. கந்தையா**

உலக நாகரிக ஒளியின் உச்ச நிலையில் விளங்கிய கிரேக்கம், லத்தீன் ஆரியம் போன்ற பெரும்பான்மை இன மக்களின் மொழிகளே இன்று இருந்த இடம் தெரியாது மறைந்து மந்திரத்துக்கு மட்டும் பயன்படும் போது சிறுபான்மை இனங்களின் மொழி பேணிக் காக்காவிடின் அழிவுக்கு காரணம் வேண்டுமா? உலக மொழிகளில் வளமான மொழி தமிழ். பல நாடுகளில் பல கோடி மக்களின் தாய் மொழியாகத் தமிழ் வளர்ந்தோங்கினும் ஈழத்துத் தமிழே தூய்மை, இனிமை, தெய்வீகம் முதலிய சிறப்பு அம்சங்களுடன் பாதுகாக்கப்படுகிறது.

பிறமொழிக் கலாநிதிகளும், மொழி ஆராய்ச்சி வல்லுனர்களும் வியந்து பாராட்டியதோடு ஈழத்தமிழர் மீது உயர்ந்த மதிப்பினையும் வைத்துள்ளனர். மொழியின் பாதுகாப்பு கலாநிதிகளிடமோ பண்டிதப் புலவர்களிடமோ கிடையாது. அப்பாரிய பணி பொதுமக்களிடமே உண்டு. மொழி காக்கப்படவேண்டுமெனில் இனம் காக்கப்படவேண்டும். எனவே தான் ஈழத் தமிழைக் காக்கும் அரும்பணியை உலக உத்தமர்களது ஆசியோடும், உலகத் தமிழரது வாழ்த்துடனும், ஈழவாழ் தமிழ் பேசும் மக்களது ஆதரவோடும் மூதறிஞர் செல்வநாயகம் அவர்கள் ஏற்றுள்ளார்கள்.

## தீர்க்கதரிசி செல்வா

தமிழை அழித்துத் தமிழரையும் ஒழிக்கும் ஆரம்ப கால்கோளாக 1948ல் சிங்கள அரசு இலங்கைக் குடியுரிமைச் சட்டத்தையும், இந்திய பாகிஸ்தானிய குடியுரிமைச் சட்டத்தையும் நிறைவேற்றியது. இருபத்தைந்து ஆண்டுகளின் முன் தீர்க்கதரிசனத்தோடு தந்தை செல்வா, எதிர்காலத் தமிழ் பேசும் சந்ததியை இந்நாட்டில் சுதந்திரமாக வாழவைக்கும் பணிக்குச் சங்கநாதஞ் செய்தார். அன்று முதல் இன்றுவரை எத்தனையோ போராட்டங்களை நடாத்தி வருகின்றார்;

## ஜூன் - 5.

1956 ஜூன் 5ந் தேதி தமிழன் வரலாற்றில் மறக்க முடியாத திருநாள். 24 மணி நேரத்துள் சிங்களம் மட்டும் சட்டம் பிரதமர் பண்டாரநாயக்கா தலைமையில் பாராளுமன்றத்தே நிறைவேறத் தயாராகிறது. அதனை எதிர்த்து தமிழ் பேசும் வீரச் சமுதாய சத்தியாக்கிரகிகள், காலிமுகத் திடலில் தந்தை செல்வாவின் தலைமையில் அவரைச் சூழ இருக்கிறார்கள்; செல்வாவின் மகனை ஏவிவிடப்பட்ட சிங்களக் காடையர்கள் தாக்குகிறார்கள்; தொண்டர்கள் சிலர் கட்டுப்பாட்டை மீறிக் கொதித்தெழுகிறார்கள்.

பெற்றபிள்ளை காடையர்களாற் கொடிய முறையில் கண்முன்னே தாக்கப்படும் போது அமைதி! அமைதி எனக் கூறித் தொண்டர்களைக் கட்டுப்பாட்டுள் வைத்திருக்கும் பாரிய பணியைக் கடமையாகக் கொள்ளும் ஒரு தந்தையின் இதயம் எத்துணை வைராக்கியம் படைத்ததாக இருக்கவேண்டும் என்பதை எண்ணிப் பாருங்கள்; 1956ல் திருமலை யாத்திரையின்போது கல்லும், முள்ளும், காடும், காட்டாறும் தாண்டிப் பாதயாத்திரை சென்ற பரிதாபத்தைச் சிந்தித்துப்பாருங்கள்.

## சிறை சென்றார்

கால்கள் நடக்கமுடியாத நிலை; வாயால் பேசமுடியாத நிலை; சுயமாக உண்ணவோ உடை அணியவோ முடியாத நிலை; இந்நிலையில் சிங்கள சிறீ என்ற நாசபாணம், தமிழர் மீது ஏவப்படுகிறது. செல்வா அவர்கள் மட்டுநகர் சென்று சிங்கள சிறீயை அழித்துச் சிறையிருந்தபோது அத்தனை துன்பத்தை ஏன் அனுபவித்தார் என்பதைக் கற்பனை செய்து பாருங்கள்

1958ம் ஆண்டு திட்டமிட்ட இனக் கலவரத்தால் அகில இலங்கையிலும் தமிழ் இரத்த ஆறு பாய்ந்தது. கொலை, கொள்ளை, கற்பழிப்பு, தீவைப்பு முதலியன உக்கிரமாக நடைபெற்றது. பிராமண குருவைத் தூணுடன் கட்டி அவர் மீது பெற்றோல் ஊற்றித் தீமூட்டி எரித்தார்கள். சாரைவாய்த் தேரை போல தமிழர் படும் அவலநிலை கண்டு செல்வா விட்ட கண்ணீர் கூரியவாளாகாது துப்பாக்கி வடிவமாகிய தெய்வத்தன்மையைத் துருவிப்பாருங்கள். திருமலை நடராசனும், மட்டுநகர் ராசேந்திரனும், மலையக ஐயாவும், பிரான்சிசும், கொடிகாம ஐயனும் மறவர் குல மாணிக்கம் சிவகுமாரனும் போன்ற எண்ணற்ற வீரத் தியாகிகள் இலட்சியத்திற்காக உயிர்நீத்த சோக வரலாறுகளை எண்ணுங்கள். தரப்படுத்தல் என்ற வச்சிரகுடாரத்தால் தமிழ் மாணவர் சமுதாயத்தைத் தரைமட்டமாக்கிய சூழ்ச்சிகளை எண்ணுங்கள். புதிய அரசியல் திட்டம் என்றபெயரால் தமிழ் இனத்திற்கு கல்லறை தோண்டிய பாதகத்தைச் சிந்தியுங்கள்.

உரிமைக்குரல் எழுப்பிய மாவைச் சேனதி, பயிலைப் புஷ்பராசன் போன்ற மாணவ வாலிப வீரர்கள் இரண்டு வருடங்களுக்கு மேல் அடியும் உதையும் வாங்கித் தலைமயிரும் தாடிமயிரும் பிடுங்கப்பட்டு, நகக்கண்களுக்குள் ஊசி ஏற்றப்பட்டபோதும் சுதந்திர உணர்ச்சி குன்றாது வீர உணர்வுடன் நிற்பதைக் கருத்திற் கொள்ளுங்கள்.

## அறைகூவல்

செல்வநாயகம் அவர்கள் இராணுவத் தளபதியல்ல; நாட்டின் சர்வாதிகாரியுமல்ல; இருபத்தைந்து வருடங்களின் முன் தீர்க்கதரிசனமாக கூறினார். வடக்கென்றும், கிழக்கென்றும், மலைநாடு, மன்னாரென்றும் பிளவுபட்ட தமிழ் பேசும் சமுதாயத்தையும், லட்சோப லட்சம் மாணவ வாலிபர்களையும் ஒரே அணியில் ஒரே கொடிக்கீழ் திரளவைத்தார். ஆட்சியாளராலும் அதிகாரிகளாலும் கடந்த கால் நூற்றாண்டாகச் சித்திரவதைப்பட்ட தமிழ்பேசும் சமுதாயத்தை சுழியிலும் சூறாவளியிலும், அலையிலும், ஆழ்கடலிலும் சிக்கி சீரழிந்து சிதறி அழியாது நிதானமாக வழி நடத்திச் சுதந்திர உணர்வை ஊட்டி உரிமைக்கு அறைகூவல் எழுப்பியுள்ளார். இந்த அறைகூவலை அகில உலகும் எதிர்பார்க்கிறது.

கடந்த கால் நூற்றாண்டாக எந்தச் சிங்கள ஏகாதிபத்திய ஆட்சியை எதிர்த்துத் தந்தை செல்வா போராடி வந்தாரோ, அந்த ஏகாதிபத்தியவாத அரசு செய்யத்துணியாத செயலை, கொடுந்துரோகத்தை, எந்தத் தமிழினத்தை அடிமைத் தளையினின்றும் விடுவிக்க இத்தனைத் துன்பங்களை அனுபவித்தாரோ அந்த இனத்தைச் சேர்ந்த தமிழன் ஒருவன் செந்திரைக்குப் பின்னால், சிங்கள ஆட்சியின் அபேட்சகராக தந்தை செல்வாவின் அறைகூவலை ஏற்றுத் தமிழுக்கும் தமிழர்க்கும் தாரைவார்க்கத் தேர்தற் களத்தில் இறங்கியுள்ளதை எண்ணி ஆத்திரமோ, ஆச்சரியமோ அடையவேண்டியதில்லை.

## எட்டப்ப சோசலிசம்

ஆபிரகாம்லிங்கனுக்கு ஒரு கருங்காலி; கிறிஸ்துவுக்கு யூதாஸ்; காந்தியாருக்குக் கோட்சே; கட்டப்பொம்மனுக்கு எட்டப்பன்: இது வரலாறு. இன விடுதலைப் போரின் உக்கிரமான நிலையில் தலைவர்களும் மக்களும் ஏகமனதாக நிறுத்திய தந்தை செல்வாவைக் காட்டிக்கொடுத்து, தமிழனை ஒழித்துக்கட்ட முனைந்துள்ள அரசாங்க அபேட்சகராக ஒரு தமிழன் வந்துள்ளார் என்றால் மர்மம் புரியாத புதிரல்ல.

அம்பலங்காளாற் தமிழினம் அம்பலமாவது வரலாறு. பண்டாரவன்னியனது படைத் தளபதி முனியப்ப வன்னியன் யாழ்ப்பாணக் கோட்டையைத் தகர்க்க வந்தபோது அம்பல வகுப்பான் ஒருவன் காட்டிக் கொடுக்க தளபதி சுடப்பட்டு மரணமானான். போரின் முடிவு கூறவா வேண்டும்? இந்த வரிசையில் வந்த செங்கொடி வீரன், புதிய பாதையில் தமிழர் அணிதிரண்டு "மணிமந்திர ஜனநாயக எட்டப்ப சோசலிசம்" என்ற முற்போக்குக் கொள்கையை ஏற்று சுபீட்சமாக வாழ வழிசமைக்க வேண்டுமாம். அருமையான பாதை. பாதையின் சிறப்புகளையும் நாம் நினைவு கூற வேண்டாமா?

## அவர் கூறும் பாதை!

தொழிலாளர்க்காகப் போராடியபோது உயிரிழந்த தோழர் கந்தசாமிக்குத் தென்னிலங்கையில் நாட்டிய சிலை நொருக்கப்பட்ட பாதை; தென்னிலங்கையிலுள்ள தமிழ்ப் பாடசாலைகளை மூடித் தமிழ்ப் பிள்ளைகளின் கல்விக்குக் கல்லறை கட்டிவருகிறார்களே அந்தப் பாதை; நியாயமான தமிழ் மொழி உபயோகச் சட்டத்தை எதிர்த்து ஊர்வலம் நடத்திமரணமான பௌத்த பிக்குவுக்கு சிலைகட்டி பிக்குவின் தியாகத்தைப்பற்றி கம்யூனிஸ்ட் சித்தாந்தி பீற்றர் கெனமன் பல மணி நேரம் வாழ்த்திய வகுப்புவாதப்பாதை: மகாவலி கங்கை கோனை என்று பேரவையில் இடதுசாரிகள் தமிழனை இழந்த இனவாதப்பாதை; மலையகத் தொழிலாளர் கள் பட்டினியால் வாட்டி வதைத்து, வசைமாரி பொழிந்து, தொழிலாளர் எற்றி புல்லுமலைக் காடுகளில் பொலிசாரே தள்ளிவிட்ட சுவர்க்க புரிப்பாதை; கம்யூனிஸ்டுத் தலைவரும், உதவி மந்திரியுமான துடாவை கடமையாற்றும் கல்வித் திணைக்களம் தரப்படுத்தல் என்ற சதிகாரத்திட்டத்தால் தமிழ் மாணவரை வெங்கொடுமைச் சாக்காட்டிற்கு அனுப்பிய முற்போக்குப் பாதை; தமிழாராய்ச்சி மகாநாட்டில் தாய்க் குலத்தின் மானத்தைக் கருவறுத்து, மக்களைச் சித்திரவதை செய்து ஒன்பது உயிர்கள் துடிதுடித்து மரணமாகக் காரணமான பொலி

—6-ம் பக்கம் பார்க்க

---

## தமிழ் ஈழத்தின்...

—2-ம் பக்கத் தொடர்

40 நீண்ட ஆண்டுகளுக்கு முன்வைத்த பாட்டாளி வர்க்கப் புரட்சி மூலம் ஆட்சியைக் கைப்பற்றுவோம் என்ற எண்ணத்தையும் இவர்கள் முற்றாகக் கைவிட்டு விட்டனர். எனவே பொதுவுடைமை வாதிகள் சிங்கள மக்களின் தலைவர்களாகித் தமிழ்—சிங்கள ஒருமைப்பாட்டை ஏற்படுத்துவதென்பது எக்காலத்திலும் நடைமுறைசாத்தியமாகமுடியாத கற்பனையே.

திரு. வ. பொன்னம்பலம் அவர்கள் சரியாகக் குறிப்பிட்டிருப்பதுபோல கம்யூனிஸ்ட் கட்சியைப் போலவே, தமிழரசுக்கட்சியோ அல்லது அமைந்துள்ள தமிழர் கூட்டணியோ ஒற்றையாட்சி அமைப்புள்ள இன்றைய இலங்கையில் ஆட்சி அதிகாரத்தைக் கைப்பற்றும் நிலைக்கு வரப்போவதில்லை என்பது முக்காலும் உறுதி. தமிழர் கூட்டணியின் நோக்கம் சிங்கள மக்களின் பெரும்பான்மை ஆதரவைப் பெற்று ஆட்சிக்கு வரும் கட்சிகளுடன் பேச்சுவார்த்தை நடாத்தி உரிமைகளைப் பெறுதல் அல்லது சிங்கள ஏகாதிபத்தியத்தை எதிர்த்துப் போராடி இழந்த உரிமைகளை மீட்டல்.

முதலாவது வழியைச் சிங்களக் கூட்டணி முற்றாக நிராகரித்துவிட்டது. எனவே, இன்று தமிழர் முன்னுள்ள வழி ஒன்றே. அது மேற்குறிப்பிட்ட இரண்டாவது வழியே ஆகும்.

காங்கேசன்துறையில் தமிழர் கூட்டணிக்கு வரலாறு காணாத மாபெரும் வெற்றியை அளிப்பதன் மூலம் பின்வரும் உண்மைகள் நிலைநிறுத்தப்படும்.

(1) தமிழர்கள் தமக்குப் பாதகமான சிங்கள ஆரிய அமைப்புச் சட்டத்தை நிராகரிக்கிறார்கள்.

(2) தமிழர் கூட்டணியின் நடவடிக்கைகளை முற்றாக ஆதரிக்கிறார்கள்.

(3) சிங்கள அரசு தமிழர் கூட்டணியுடன் ஒப்பந்தம் செய்து கொண்டு தமிழரின் உரிமைகளை முற்றாக வழங்க வேண்டும்.

(4) சிங்கள அரசு இதனை மறுத்தால் போராட்ட மூலம் இழந்த உரிமைகளைப் பெறவேண்டும்.

(5) பொதுவுடைமைப் போர்வையிலே சிங்கள சோவினிசத்தை நிறுவமுயலும் கம்யூனிஸ்டுகளை தமிழ் மக்கள் நிராகரிக்கின்றனர்.

(6) சிங்களக் கூட்டணியின் அந்நிலையை மக்கள் ஏற்றுக் கொள்ளவில்லை.

(7) மலைநாட்டுத் தமிழர்களுக்கு அனைத்து உரிமைகளும் வழங்கப்பட வேண்டும்.

(8) திட்டமிட்ட சிங்களக் குடியேற்றத்தை அரசு நிறுத்தவேண்டும்.

(9) தமிழருடைய கல்வி வாய்ப்புகளுக்கு எதிரான சதிகளை அரசு உடனே நிறுத்தவேண்டும்.

(10) சந்தர்ப்பவாதிகளையும் துரோகிகளையும் ஒதுக்கிவிட்டு தேர்ந்தெடுக்கப்பட்ட மக்கள் [illegible] மூலம் தமிழர் [illegible] வேண்டும்.

(11) தமிழாராய்ச்சி மாநாட்டுப் படுகொலை, தரப்படுத்தல், சிறைப்பட்ட தமிழ் இளைஞர் விவகாரம், மலைநாட்டுத் தமிழர்களுக்கு இழைக்கப்படும் அநீதி, என்பனவற்றை அரசு நீதியான முறையில் விசாரணை செய்யவேண்டும். அவற்றுக்கு உடனடித் தீர்வுகாண வேண்டும்.

(12) ஈழத் தமிழ் மக்களின் அடிப்படை உரிமைகள் மீறப்படுவதை எதிர்த்து அனைத்துலக நாடுகளும் குரல் கொடுத்துத் தார்மீக ஆதரவை நல்கவேண்டும்.

(13) தமிழர்களுக்கு அவர்களது உரிமைகளை முற்றாக வழங்குவதன்மூலம் சிதைந்து வரும் தேசிய ஒருமைப்பாட்டைச் சீர்திருத்தவேண்டும்.

(14) இந்நாட்டில் வாழும் அனைத்து இனங்களும் சமம் என்ற நிலையை உருவாக்கி அதன் மூலம் எழில் கொஞ்சும் இத்தீவைப் பொருளாதார வளங்கொழிக்கும் சுவர்க்க பூமியாக மாற்ற வேண்டும்.

(15) அயல் நாடுகளில் சமத்துவத்துக்காக குரல் கொடுக்கும், போராட்டம் நடத்தும் நண்பர்களின் கரங்களை வலுப்படுத்த வேண்டும்.

—எதிர்வரும் தேர்தல் இவற்றையெல்லாம் உறுதி செய்வதாக அமையப் போகிறது என்பதை உணர்ந்து காங்கேசன்துறை வாக்காளர் தமது ஒன்றினைந்த ஆதரவைத் தமிழர் [illegible] அளிப்பார்கள்.

— [illegible]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழர்கள் மீது நடக்கிறது தனிச் சிங்களத் திணிப்பு! காங்கேசன்துறையிலோ வி. பி.யின் கதை அளப்பு! மல்வத்தை கி. ச. உறுப்பினரின் உள்ளக்கொதிப்பு!

காங்கேசன்துறை தேசிய அரசுப் பேரவைக்கான இடைத் தேர்தலில் தான் வெற்றிபெற வேண்டும் என்னும் நோக்கோடு என்னமோ எல்லாம் பிதற்றி தள்ளுகின்றுர் வி. பி. அவர் வெளியூர் தமிழ் மக்களின் அவல நிலையை அறிவாரா? தமிழ் மக்களுக்கு சம அந்தஸ்து கொடுத்திருக்கிறேம் என்கிறுர். எந்த அளவில் கொடுக்கப்பட்டுள்ளது என்பதைதெளிவுபடுத்துவாரா?

அம்பாறை மாவட்டத்தில் அரசாங்க அதிபர் அவர்களுக்கு தமிழில் தொடர்பு கொண்டால் உடன் எவ்வித தன்மைகளும் கிடையாது. அம்பாறை பொலிஸ் நிலையத்திலும் மற்றும் உதவி அரசியட்சகரின் அலுவலகத்திலும் தமிழில் பேசிக் கதைத்தால் உடன் எவ்வித மறுப்பும் இன்றி அவர் வெளியில் போகவேண்டும். அரசாங்க உத்தியோகத்தில் ஊழியர்களாய் இருப்பவர்கள் சிங்களத்தில் மட்டுமே கருமங்களைச் செய்கின்றுர்கள். அம்பாறை உதவி பொலிஸ் அத்தியட்சகர் அலுவலகத்திலிருந்து 21-1-75ம் நாள் எனக்கு அனுப்பிய ஓர் அஞ்சல் தனிச் சிங்களத்தில் அனுப்பப்பட்டுள்ளது. இது எதைக்காட்டுகிறது. நீங்கள் பேசும் சிங்கள வெறி பிடித்த சோசலிசத்தைக் காட்டவில்லையா?

இது மட்டுமா? விவசாய விஸ்தரிப்பு திட்ட விரிவாக்கம் யாவும் சிங்களத்திலேயே. கூட்டுறவுப் பண்டகசாலை அலுவலகம் முற்றிலும் தனிச் சிங்கள வெறியூட்டப்பட்டுள்ளது. கல்முனை பிரசித்த வீதியில் "சதோச" என்று ஓர் அரசாங்க வியாபாரக்கடைக்கு பெயர் இருக்கிறது. அது என்ன தமிழ் பொன்னம்பலத்தாரே? அதை கொஞ்சம் விளக்குவீர்களா? எங்கே தமிழ்பேசப்படுகிறது? எந்த அரசாங்க அலுவலகங்களில் தமிழ் மொழியில் பதில் கிடைக்கிறது.

தெற்கிலே வளஸ்முல்ல என்ற இடத்தில ஒரு பொலிஸ் ஸ்டேசனில் தனிச் சிங்களத்தில் மட்டுமே விளம்பரப் பலகை இருக்கிறது. இதற்குப் பெயர் தான சோசலிசமா? இ. போ. ச. வில் யாராவது முறைப்பாடு செய்தால் தனிச் சிங்களத்திலே பதில்! எமது பகுதி மல்வத்தை கிராமாட்சி பிராந்தியம் தமிழ் பகுதி என ஆட்சி செய்கின்றேம்.ஆனல் இங்கே பிறப்பு,இறப்புபதிவுக்காரர் தனிச் சிங்களத்திலே பிழையான பெயர் பதிவு நடாத்தப்படுகின்றது. இதைப் பற்றி எத்தனை எத்தனையோ முறைப்பாடுகள் செய்தும் அவை சோசலிச குப்பைக் கூடைக்குத்தான்

எங்களின் கிராமாட்சி மன்றத்திற்கு வரும் அஞ்சல்கள் யாவும் தனிச் சிங்களத்திலேயே தான் வருகின்றன. எந்த மொழியிலும் மொழி பெயர்ப்பு இல்லை!

இது மட்டுமா? இன்னும் பாருங்கள்! நாட்டில் சமதர்மம் சோசலிசம் பேசும் உங்களுக்கு அடையாள அட்டை எந்த மொழியில் கொடுத்துள்ளார்கள். தமிழ் மொழியில் இருக்கிறதா? வேண்டுமென்று செய்யும் தமிழ் மொழித் துரோகத்தில் இதுவும் ஒன்று. இன்னும் விபரம் வேண்டுமா? தருவேன். ஆனல் வீண் வேலை. உங்கள் அடிமை ஆட்சிக்கு பலத்த அடி காங்கேசனில் தமிழ் பேசும் மக்களால் கிடைக்கும்.

உடனே உங்கள் அமைச்சர் கௌரவ பதவி துறப்பாரா? என்பதை அறியலாமா?

—வெ. சுப்பையா,
கிராமாட்சி மன்ற உறுப்பினர்
4ம் வட்டாரம்,
மல்லத்தை கிராமம்.

## இன்று சென்னையில..

—1-ம் பக்கத்தொடர்

சுழும்வாழ் 35 இலட்சம் தமிழ மக்கள் சார்பிலும், சுதந்திரன் வாசகர்கள் சார்பிலும் நமது சார்பிலும் நெஞ்சார நிறைந்த இனிய வாழ்த்துக்களை தெரிவித்துக்கொள்ளுகிறேம்!

திருமணம் நடைபெறும் மண்டப முகவரி:-
இரா சுனர்த்தனம்,
8, ரெண்டால்ஸ் வீதி
எழும்பூர்
சென்னை- 600008
சுனர்த்தனம் அவர்களின் இல்ல முகவரி:-
12, மாண்டித் சந்து
எழும்பூர்
சென்னை-600008
—கோவை.


4வது ஜனத்திரள் வாரமாக
லிங்கன் லிடோ (யாழ் நகர்)

தென்னகத்தில் 100 நாட்களுக்கு மேல் ஓடி மக்களின் நன்மதிப்பை பெற்ற வண்ணச் சித்திரம்.


ஜெமினி, கே. ஆர். விஜயா, ராஜன்,
சௌகார் ஜானகி, முத்துராமன்,
நாகேஷ், சிவகுமாரன், சுந்தரராஜன்,
—நடித்த—

தேவரின்

தெய்வம்

(ஈஸ்ட்மென் கலர்)

இசை: திரை இசை மன்னர் குன்றக்குடி வைத்தியநாதன்
டைரக்ஷன்: எம். ஏ. திருமுகம்.


இப்பொழுது காட்சியளிக்கிறது!

கெப்பிட்டல் பிளாஸா
வெலிங்டன்

ஸ்ரீகாந்த், பிரமிளா, நாகேஷ்,
குமாரி பானுமதி, சுந்தரராஜன்,
அசோகன், லக்ஷ்மி (பசு)

தேவரின்

கோமாதா
என்
குலமாதா

(ஈஸ்ட்மன் கலர்)



இப்பொழுது காட்சிதருகிறது 3வது வாரம்

கெபிட்டி

உங்கள் காலிலிருக்கும் செருப்பு உங்களுக்கு சேவை செய்து தன்னைத் தானே அழித்துக் கொள்கிறது ஆனல் உங்கள் கையிலிருக்கும் பைப்பு உங்களையே அழிக்கிறது.

சாவித்திரி
ஏ. வி. எம். ராஜன்
பிரமிளா
மேஜர்
தேங்காய்சீனிவாசன்
எம். ஆர். ஆர். வாசு
—நடித்த—

வீட்டு
மாப்பிள்ளை

மலரே நீ என மலரல்ல......?





ராசி நல்ல ராசி உன்னை மாலையிட்ட மங்கை மகராசி.



ரீகல் நுவரெலியா நெல்சன் திருமலை
திரைகளில் காட்சியளிக்கிறுன்!

எப்படியும் ஆளலாம் என்றில்லாமல் இப்படித்தான் ஆளவேண்டுமென அரசியலுக்கே இலக்கணம் வகுத்தவன் —ராஜ ராஜ சோழன்

தமிழன் சரித்திரத்தை வீரத்தை பெருமையை எவரும் என்றும் அறியும் வண்ணம் கல்வெட்டுகளிலே முதன் முறையாக பதிப்பித்தவன் ராஜ ராஜ சோழன் காணத் தவறுதீர்கள்.

சிவாஜி, விஜயகுமாரி, நம்பியார்,
எஸ். வரலட்சுமி, முத்துராமன் - சிவகுமார். — நடித்த

ராஜ ராஜ சோழன் (கலர்)



இப்பொழுது காட்சியளிக்கிறது

செல்லமகால்

சிவாஜி, சௌகார் ஜானகி, ஜெயலலிதா,
ரவிச்சந்திரன், நாகேஷ் நடித்த-

மோட்டார் சுந்தரம்பிள்ளை


இப்பத்திரிகை சிலோன் நியூஸ் பேப்பர்ஸ் ... பண்டாரநாயகமாவத்தை 194 ஏ. இலக்கத்தில் 1975ம் வருடம் ... அச்சிட்டுப் பிரசுரிக்கப்பட்டுள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org